★★
Registered as a Newspaper in Ceylon விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

ஒளி 7 இதழ் 147

National Tamil Daily தேசிய தினசரி

(8-7-65)

விசுவாவசு ஆனி 24 ஈபி அவ் பிறை 8 வியாழக்கிழமை

## ஜி. ஜி. ஐ. நா. செல்வார்



பம்பலப்பிட்டி, புதன் அறியப்படுகிறது.
யாழ்ப்பாணம் எம். பியும் முக்கியமான விஷயங்கள்
அகில இலங்கைத் தமிழ்க்காங் விவாதிக்கப்படவிருக்கும் இவ்
கிரஸ் தலைவருமான திரு. ஜி. வருடத்திய ஐ. நா.மகாசபைக்
ஜி. பொன்னம்பலம் இக் கூட்டத்தில் இலங்கையின்
வருடம் செப்டம்பர் மாதத்தில் தலைமைப்பிரதிநிதியாகச் செ
ஆரம்பமாகும், ஐ. நா. மகா வதற்கு திரு. பொன்னம்ப
சபைக் கூட்டத்திற்கு இலங்கை பலம் நியமிக்கப்பட்டுள்ளதை
தூதுக்கோஷ்டிக்குத் தலைமை அரசாங்க வட்டாரங்கள் வர
தாங்கிச்செல்லக்கூடுமென்று வேற்றுள்ளன.

பார்லிமெண்டில்

# ஆர். ஜி. யின் மோசமான வகுப்புவாதப் பேச்சு!

## 1965-66 வரவு செலவு திட்டநகல் பரிசீலனை

பம்பலப்பிட்டி, புதன்

1965-66க்கான வரவு செலவுத்திட்டம்பற்றி நேற்று மந்திரிசபை கூடிய ஆராய்ந்தது. கல் மதிப்பீட்டின்படி 1965-66ம் வருடத்துக்கான மூழுச்செலவு ரூ 2 384 899,971 என எதிர்பார்க்கப்பட்டுள்ளது. இதில் அதிகஅளவு நிதி அமைச்சுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

ரூ 409 446,700 நிதிஅமைச்சுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

கல்வி, கலாசார அமைச்சு உணவு, விவசாய அமைச்சு காணி, நீர்ப்பாசன அமைச்சு ஆகிய அமைச்சுக்களுக்கு அடுத்ததாக முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. கல்வி, கலாச்சார அமைச்சுக்கு ரூ. 869,189,058, உணவு, விவசாய அமைச்சுக்கு 855 283,744 ரூபாவும், காணி, நீர்ப்பாசன அமைச்சுக்கு 289 703 921 ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

## யாழ். மக்கள் கள்ளக்கடத்தல்காரர்; வல்வெட்டி ஒரு கடத்தல் தளமாம்

### துரைரத்தினம் -- ஆர். ஜி. வாய்ச்சண்டை

கொழும்பு, புதன்

எதிர்க்கட்சியினரின் பிரேரணையொன்று இன்று பார்லிமெண்டில் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட பொழுது, என்றுமில்லாதமாதிரி இரு எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் வகுப்புவாதத்தை – இனத்துவேஷத்தை தாராளமாகக் கிளப்பி, உணர்ச்சி ததும்பும் வார்த்தைகளை அடுக்கடுக்காகப் பேசி, இலங்கை பார்லிமெண்டின் சரித்திரத்திலேயே ஒரு 'திருப்பத்தை' ஏற்படுத்தி விட்டனர். இந்த சூடான விவாதத்தின் போது, எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் சிலர்; "யாழ்ப்பாணத்தவர், கள்ளக்கடத்தலைத் தொழிலாகக் கொண்டவர்கள்"; "வல்வெட்டித்துறை ஒரு கள்ளக் கடத்தல் தளம்" என்று தாராளமாகப் பேசினர்!

பார்லிமெண்ட் இன்று கூடியபொழுது எதிர்க்கட்சி அங்கத்தினர்களின் பிரேரணையொன்று விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. "இலங்கையர் அல்லாதவர்கள் இங்கு காணி இல்லையோ அல்லது வீடுகளையோ வாங்கவோ விற்கவோ தடை செய்ய வேண்டும்" என்றும் அந்தப் பிரேரணையில் கோரப்பட்டிருந்தது. இப் பிரேரணையில் எதிர்க்கட்சித் தலைவர் திருமதி ஸ்ரீமாபண்டாரநாயக்கா, டாக்டர் என் எம் பெரேரா, திரு பீட்டர் கெனமன், திரு மைத்திரிபாலசேனநாயகா ஆகியோர் கையெழுத்திட்டிருந்தனர்.

### பிரேரணைக்கு ஆதரவு

பிரேரணையைத் தாக்கல் செய்து திருமதி ஸ்ரீமா பேசுகையில்; மலைநாட்டுப் பகுதியில் சண்டியர்கள் ஒதுக்கப்படுவதாகவும் அங்கெல்லாம் மலைநாட்டுத் தமிழர் வேட்டை "இடம்" பிடித்துள்ளனர் என்றும் கூறினார்.

அரசாங்கத்தின் சார்பில் திரு சி பி டி சில்வா இப்பிரேரணைக்கு பதிலளிக்கையில்; இப் பிரேரணையை கொள்கையளவில் ஏற்பதாகத் தெரிவித்தார்.

### திருத்தம்

இதனைத் தொடர்ந்து டாக்டர் என். எம் பெரேரா திருத்தம் கொண்டுவந்தார்.

திருத்தப் பிரேரணை மீது நடைபெற்ற பேச்சுக்கள்; முதலில் சூடேறி பின்னர் காரசாரமாக மாறி, கடைசியில் வகுப்புவாதத்தில் முடிந்துவிட்டன.

### வகுப்புவாத பேச்சுக்கள்

எதிர்க்கட்சி அங்கத்தவர்களான திரு ஆர் ஜீ சேனநாயக்கா, வலப்பனை எம். பி. திரு ஹெரத் ஆகியோர் முன் என்றுமே இல்லாதமாதிரி வகுப்புவாத தோரணையில் பேசினர்.

ஒரு உச்சக்கட்டத்தில் திரு ஆர் ஜீ சேனநாயக்கா பேசுகையில்; யாழ்ப்பாணத்தவர்கள் கள்ளக்கடத்தலையே தொழிலாகக் கொண்டிருக்கின்றனர் என்றும் இந்தியர்களை இவர்களே இங்கு ஆதரித்து வைத்திருக்கிறார்கள் என்றும்

(6-ம் பக்கம் பார்க்க)

## சிங்கள கேள்விக்கு ஆங்கிலத்தில் பதிலா?

— எம். பி.

### "தெரிந்த மொழியில் பதில் அளிப்பதில் தவறில்லை" — உதவி சபாநாயகர்

கொழும்பு, புதன்

பாராளுமன்றில் சிங்களத்தில் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு ஆங்கிலத்தில் பதிலளிக்கலாமா? என்று எதிர்க்கட்சி அங்கத்தவர் இன்று ஜனப்பிரதிநிதிகள் சபையில் கிளப்பிய ஒரு பிரச்னைக்கு உதவி சபாநாயகர் பதிலளிக்கையில் மூன்று மொழியிலும் சபையின் அலுவல்கள் நடைபெறலாமென்றும் தனக்குத் தெரிந்த மொழியில் மந்திரி பதிலளிக்கலாமென்றும் கூறினார்

ஜனப்பிரதிநிதிகள் சபை உதவி சபாநாயகர் திரு ஷேர்லி கொரியா தலைமையில் இன்று பிற்பகல் கூடியது, கேள்வி நேரத்தின் போது எதிர்க்கட்சி அங்கத்தினரில் ஒருவரான திரு பிரின்ஸ் ராஜசூரியா முன்னறிவித்தல் கொடுத்திருந்தபடி 1956-ம் வருடத்திய 33-ம் இலக்க உத்தியோக மொழிச் சட்டத்தை நீதிமன்றங்களில் அமுலாக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளதா? என்று கேட்டார்.

இதற்கு உதவி நீதிமந்திரி 'ஆம்' என்று பதிலளித்தார்.

நீதிமன்றங்களில் உத்தியோக மொழியில் அலுவல்களை நடத்துவதற்கான நடவடிக்கைகள் விரைவாக மேற்கொள்ளப்பட்டு வருவதாக உதவி நீதி மந்திரி கூறினார்.

இச்சமயத்தில் திரு பிரின்ஸ் ராஜசூரியர் எழுந்து தான் சிங்களத்தில் கேட்ட கேள்விகளுக்கு உதவிநீதிமந்திரி ஆங்கிலத்தில் பதிலளிப்பதாகச் சுட்டிக்காட்டினார்.

சபைநடவடிக்கைகள் மூன்று மொழியிலும் நடைபெற்று வருகிறதென்றும்வழக்கிலுள்ள மூன்று மொழிகளில் எந்த மொழியிலும் பதிலளிக்கலாமென உதவிசபாநாயகர் சொன்னார்.

வட்டுக்கோட்டைக்கு வழி எது என்றால் துட்டுக்கு இரண்டு கொட்டைப்பாக்கு' என்பதுபோல் பதிலளிக்கிறதென்று திரு ராஜசூரியர் கூறினார்.

உதவிமந்திரி தமக்குத் தெரிந்தமொழியில் பதிலளிப்பதில் தவறு இல்லையென்று உதவி சபாநாயகர் தெரிவித்தார்.

## விமான விபத்தில் 31 பேர் பலி!

### ஒருவர்மட்டும் உயிர் பிழைத்த அதிசயம்

கெய்ரோ, ஜூலை 7

கெய்ரோவுக்கு 20மைல் தொலைவில் நடைபெற்ற விமான விபத்தொன்றில் 31 பேர் உயிரிழந்தார்கள். அதில் பிரயாணம் செய்த ஒருவர் மட்டுமே உயிர் தப்பினார்.

ஐக்கிய அரபுக்குடியரசு விமானப்படையைச் சேர்ந்த விமானம் ஒன்று இன்று கெய்ரோவுக்கு 30 மைல் தொலைவில் சுயஸ் கால்வாய்க்கு அருகில் விழுந்து நொறுங்கியது, இதில் ஐக்கிய அரபுக் குடியரசு விமானத் தளபதி ஒருவர் 21 சிப்பாய்கள். விமான சிப்பந்திகளான ரஷ்யர்கள் 10 பேர் பிரயாணம் செய்தனர். ரஷ்ய சிப்பந்திகளில் ஒருவரே உயிர் தப்பினார். வீழ்ந்து நொறுங்கிய விமானம் ரஷ்யாவில் செய்யப்பட்ட விமானமாகும்.

## அதிசய ஆட்டுக்குட்டி!

கழிபுரம். புதன்

கொட்டையாவத்தையை சேர்ந்த மாதவி ஆறுமுகம் என்பவரின் வீட்டிலுள்ள ஆடு ஓர் அதிசய ஆட்டுக்குட்டியை ஈன்றுள்ளது. அக்குட்டிக்கு 6 காலும், நெற்றியில் கண்ணும் உள்ளன. இந்த அதிசய ஆட்டுக்குட்டியை அதிகமான மக்கள் சென்று பார்வையிடுகின்றனர். இந்த ஆட்டுக்குட்டி ஈன்ற சிலமணி நேரத்தின்பின் இறந்தது.

## அண்ணாமலை சாட்டை

கொழும்பு, புதன்

திரு. ஆர். ஜீ சேனநாயக்கா, இங்குள்ள இந்திய மக்களைத் தாக்கிப் பேசியதை நியமன அங்கத்தவர் திரு. அண்ணாமலை வன்மையாகக் கண்டித்தார்.

"இந்த நாட்டிலுள்ள மற்றவர்களிலும் பார்க்க மலைநாட்டு இந்திய மக்களுக்கு அதிக உரிமை உண்டு என்று கூறிய திரு, அண்ணாமலை, இந்தியர்கள் இல்லாவிட்டால் இந்தநாடு செழிப்புற்றிருக்காது என்று தெரிவித்தார்.

### "நாங்கள் உரிமை"

"எங்களை வெறும் உரமாகப் பாவிக்க சிலர் முயற்சிக்கின்றனர். அது கனவிலும் நடைபெறமாட்டாது. எங்களின் பிரச்னைகளை இரு வருட காலத்துக்குள் தீர்த்து வைத்தால் நாங்கள் விருப்பத்துடன் இந்த நாட்டிலிருந்து வெளியேறத் தயாராக இருக்கின்றோம். நாங்கள் இங்கு படும் துயரத்தை சொல்ல முடியாது. இரத்தத்தை வியர்வையாகக் காட்டி, காட்டு நிலத்தை கழனியாக்கிய எங்களை; இந்த நாட்டுக்குச் சொந்தமில்லாதவர்கள் என்று கூறுகின்றனர் சிலர் நாங்கள் மனிதர்கள். எங்களுக்கும் இதயம் உண்டு, பண்பு உண்டு, பழக்க வழக்கங்கள் உண்டு, எங்களுடன் மற்றவர்கள் மனிதாபிமானத்துடன் நடக்க வேண்டும் திரு ஆர் ஜீ சேனநாயக்கா சொல்வது போல், நாங்கள் பிழைக்கத் தெரியாதவர்கள் அல்ல. இந்த நாட்டை செல்வம் கொழிக்கும் பூமியாக்கியது நாங்கள்தான். இதை யாருமே மறுக்கவோ மறைக்கவோ முடியாது" என்றும் திரு அண்ணாமலை கூறினார்.

## மணிவாக்கு

நாம் பிறரிடமும் சிறப்பாக நமது விரோதிகளிடமும் எப்படி அன்பு காட்டி நடந்துகொள்ளுகின்றோமென்பதே நமது பண்பாட்டுக்கு உரைகல். நம் முன் இருக்கும் தெய்வமே எல்லாரிடமும் உள்ளதையுணர்ந்தால் யாரையும் நாம் வெறுக்கமாட்டோம்.

—சுவாமி ராமதாஸ்.

ஈழநாடு

EELA NADU National Tamil Daily. Post Box 49. Jaffna. Grams: "EELANADU" Jaffana Phone: 389

யாழ்ப்பாணம் விசுவாவசு ஆண்டு ஆனி ௴ 24 வ. (8-7-65)

## புரியாத மொழியில் அரசாங்க கடிதங்கள்

ஜனப்பிரதிநிதிகள் சபையில் சட்ட மூலங்களையும் அறிக்கைகளையும், ஆட்சி அறிக்கைகளையும் அமைச்சர்களும் துணை அமைச்சர்களும் இனி தமிழிலும் வெளியிடுவார்கள் இதுபற்றி அரசாங்கக்கட்சி தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது. நல்ல தீர்மானம்; வரவேற்கவேண்டியதுதான்.

சட்டமூலங்களும், அறிக்கைகளும் ஆட்சி அறிக்கைகளும் இன்றுவரை ஆங்கிலத்திலும் சிங்களத்திலுமே வெளியிடப்பட்டுவருகின்றன, இவை தமிழிலும் வெளியிடப்படவேண்டியது தமிழ்மொழிக்கும் இலங்கையில் உரிய இடமளிக்கப்பட்டுள்ளதென்பதை எடுத்துக்காட்டுவதாக இருக்கும். தமிழ் பேசும் மக்களுக்கும் ஆறுதலளிக்கும் சட்டமூலங்களைத் தமிழில் மொழிபெயர்த்து வெளியிடுவதால மட்டும் தமிழ்பேசும் மக்கள் அன்றாடம் மொழிப் பிரச்சினையால் படும் அவலங்கள் நீங்கிவிடுமென எதிர்பார்க்கமுடியாது. தேசிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்து மூன்றரை மாதங்களுக்கு மேலாகிவிட்டது. என்றாலும் அரசாங்க இலாகாக்களிலிருந்து தமிழ்பேசும் மக்களுக்கு வரும் தந்திகளும் கடிதங்களும் இன்னும் புரியாத மொழியிலேயே அவர்களுக்கு அனுப்பப்படுகின்றன. தமிழ்ப்பகுதிகளில் உள்ள பொலிஸ்நிலையங்களில் கூடப் பொதுமக்கள் அளிக்கும் வாக்குமூலங்கள் அவர்களுக்குப் புரியாத மொழியில் பதிவுசெய்யப்பட்டு அவர்கள் புரிந்துகொள்ளாமலே கையொப்பமும் வைக்கவேண்டியுள்ளது.

தமிழ்பேசும் பகுதியில் தமிழ் மொழியே நிர்வாகமொழியாக இருக்குமென்றும் இதர மாகாணங்களிலுள்ள தமிழ்பேசும் மக்கள் அரசாங்கத்துடன் தமிழ்மொழியில் தொடர்பு கொண்டு தங்கள் அலுவல்களைச் செய்யலாமென்று 'பண்டா - செல்வா ஒப்பந்தம் கூறியது, 'டட்லி - செல்வா உடன்பாடும் இதே அடிப்படையில்தான் அமைந்துள்ளதாம். மத்திய அரசாங்கக் காரியாலயங்களில் தமிழ்பேசும் மக்கள் தங்கள் மொழியில் தொடர்பு கொண்டால்தான் அந்த மொழியில் அலுவல்களைச் செய்ய முடியும். ஆனால் தமிழ் பேசும் மக்களுக்கு அந்தக் காரியாலயங்களிலிருந்து அனுப்பப்படும் தந்திகளும், கடிதங்களும் அவர்களுக்கு புரியாத சிங்களமொழியில்தான், இன்றுள்ளது போற் இனியும் அனுப்பப்படுமானால் அதனால் என்ன பயன்?

தமிழ்பேசும் மக்களுக்கு அவர்கள் எந்தப் பகுதியில் வாழ்ந்தாலும் அவர்களுக்கு அரசாங்க காரியாலயங்களிலிருந்து அனுப்பப்படும் தந்திகள், கடிதங்கள், அறிக்கைகள் யாவும் அவர்களுக்குப் புரியக்கூடிய மொழிகளில் அனுப்பப்படவேண்டும். சிங்களமொழியில் அனுப்பப்படும் கடிதங்களுக்கும் தந்திகளுக்கும் தமிழ் அல்லது ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்பை அனுப்பினாலாவது தமிழ்பேசும் மக்கள் கண்ணிருந்தும் குருடர்களாகாமலிருக்க முடியும். அரசாங்கத்துடன் ஒத்துழைக்கும் தமிழ் பிரதிநிதிகள் இவ்விஷயத்தில் கவனம் செலுத்த வேண்டியது அவசியம். சட்டமூலங்களைத் தமிழில் வெளியிட்டுக்கொண்டு தமிழ்பேசும் மக்களுக்கு அன்றாட அலுவல்கள் புரியாத மொழியில் செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டால் அது அவர்களுக்கு ஆத்திரமூட்டுவதாகவே இருக்கும். இது ஒற்றுமைக்கு உதவி செய்வதாகாது.

## 'சமயவகுப்புக்கள் அவசியம்'
### ஆண்டுவிழாவில் பேச்சு

பம்பலப்பிட்டி, செவ்வாய் "இறைவன் அருளால் மானிடப்பிறவி எடுத்த நாம் பல இடையூறுகளினின்றும் பிழைத்து அவனருளால் அவனைப் போற்றி வருதலே மானிடப்பிறவியின் நோக்கமாகும் இதற்கு பக்திநெறியைவளர்க்க வேண்டும். பக்திநெறி வளர்வதற்கு பழவினைகள் மாறவேண்டும், பக்குவம் அடைந்தோர் மனத்தில்தான் பக்திமார்க்கம் பிறக்கும். இதற்கு இவ்வாறான சமயவகுப்புகள் மிக, மிக அவசியம்" என்று சேர் சர்தைய வைத்தியநாதன் கொழும்பு இந்துவாலிபர்சங்கசமயவகுப்பு ஆண்டுவிழாவிற்கு தலைமை வகித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

வெள்ளவத்தை சம்மாங்கோட்டார் ஸ்ரீ மாணிக்கவிநாயகர் ஆலயமண்டபத்தில் இவ்விழா நடைபெற்றது.

செல்வி சற்சொரூபவதி நாதன் பேசும்பொழுது குறிப்பிட்டதாவது:

சகல மக்களும் சமமாக வாழ வழி வகுப்பதோடு இம்மைக்கும், மறுமைக்கும் வேண்டிய இன்பத்தைப் பெற உறுதுணை புரிவது மதம். இன்சூரன்ஸ் போன்றது. மனிதன் இறந்த பின்புதான் இன்சூரன்சால் நன்மை ஏற்படுகிறது. அதேபோன்றுதான் சமயமும், நாம் இறந்த பின்னர் மறு உலகத்தில் அதிக பலனளிக்குகின்றது என்றார்.

திரு. செ. தனபாலசிங்கம் பேசியபின், ஞாயிறு சமய வகுப்பில் பங்கு பற்றிய மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன.

### காமன்வெல்த்
## கலைவிழாவுக்கு இலங்கை கலைஞர்

கொழும்பு, புதன் கண்டிய நடனம், கீழ்நாட்டு நடனம் உட்பட பதினான்கு நடனக்காரர்களும், மூன்று புலவர்களும் ஒரு சங்கீத விற்பன்னரும், மாமன்வெல்த் சங்கீத நடனக் கலைவிழாவில் இலங்கையின் சார்பில் கலந்து கொள்ளத் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பு

## விவேகானந்த சபையின் சூறுவளி நிவாரண உதவி
### மயிலிட்டி மீனவர் குடும்பங்களுக்கு எஸ். ஜே. வி. மூலம் வழங்கப்பட்டது

குரும்பசிட்டி, புதன் கொழும்பு விவேகானந்த சபையினர் சூறுவளி நிவாரண நிதியாக சேகரித்திருந்த பணத்திலிருந்து ஒரு பகுதிப் பணமான 1120 ரூபாவை சென்ற ஞாயிற்றுக்கிழமை மயிலிட்டி கிராமத்தைச் சேர்ந்த மீனவர் குடும்பங்களில் சூறுவளியால் உயிர் இழந்தவர்களது குடும்பத்தவர்களுக்கு விநியோகிக்கப்பட்டது. இப்பண உதவியை காங்கேசன் துறை எம். பி. திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் நேரில் சென்று 56 குடும்பங்களுக்கு தலா 20 ரூபா வீதம் விவேகானந்த சபையார் சார்பில் வழங்கினார். இவருடன் கூடச் சென்றிருந்த காங்கேசன்துறைப் பட்டின சபை உறுப்பினர் திரு. வி. சிவனடியார் அப்பகுதியில் சூறுவளியினால் உயிரிழந்த குடும்பத்தவர்களதும் மீன்பிடி உபகரணங்களை இழந்த மீன்பிடியாளர்களதும் நிலைகளை நேரில் காண்பித்து விளக்கி மேலும் தகுந்த நிவாரணம் வழங்கும்படி சமூகசேவைகள் மந்திரியிடம் கோரிக்கை விடுத்து ஆவன செய்யுமாறு திரு. செல்வநாயகத்திடம் கேட்டுக்கொண்டார்.

## மண்டைதீவு கண்ணகைஅம்மன் பொங்கல் விழா

இறைவனது திருவருளில் தேக்கித் திளைத்திட்ட தாயுமான சுவாமிகள் கன்றினுக்குச் சேதா கனிந்திரங்கல் போல எனக்கென்று இறங்குவாய் கருணை எந்தாய் பராபரமே என்கின்றார். பக்திப் பிரவாகம் பெருக்கெடுக்கும் போது கடவுளைத் தாயென்று அழைப்பது இயல்பு.

தாயின் தன்மையுடைய தெய்வத்தை வழிபடுவது மிக எளிதாய்விடுகிறது. பெற்றவளோடு பிள்ளை நெருங்கிப் பழகுவதற்கு சட்டதிட்டம் ஒன்றும் கிடையாது. சாஸ்திர விதிப்படி உபாசனைபண்ணத் தெரியாதிருப்பது பற்றி பக்தன் கவலைப்படவேண்டியதில்லை. குழந்தை செய்கின்ற குறும்புத்தனங்களைக் கண்டு தாய்கோபித்துவிடுவதில்லை. அது காலால் உதைப்பதும் அவளுக்கு இன்பமூட்டுகிறது. இத்தகைக்கும் காரணம் தாயும் பிள்ளையும் என்ற பாசமேயாம்.

இக் கோட்பாட்டின் உண்மையை உணர்ந்து அதைக் கடவுள் வழிபாட்டில் கையாண்ட பாக்கியவானான செல்லமுத்துகுப்புச்சாமி என்பவர் மதுரை மீனாட்சி அம்மாளின் சந்நிதியின் மூலஸ்தானலிங்கத்தோற்றம் கண்டு, அதே விதத்தில் வார்ப்பித்த அம்பாளின் முக உருவம் ஒன்றை பல ஆண்டுகளுக்கு முன் இவ்விடம் கொண்டுவந்து வைத்துப் பூஜித்துவரும்போது அம்பாள் அவருக்கு கனவில் தோன்றி இன்னும் சிலபேர் உதவியுடன் இடபோ ஆலயம் இருக்குமிடத்தில் வைத்துப் பூஜிக்கும்படி வரமளித்ததாகவும சொல்லி ஐந்து வாலிபர்களைச் சேர்த்து சிறுகொட்டில் கட்டி ஒவ்வொரு திங்கட்கிழமையும் பூஜித்துவந்தார்கள். பின்பு அம்பாளின் அநுக்கிரத் திருவிளையாடல் அளவிடமுடியாதவாறு பெருகிவர, கோவிலும் பெரிதாகி ஆண்டுக்கோர் விழாவும் நடந்து தீ மிதிப்பு வைபவமும் நடந்துவருகிறது. இத் தீ மிதிப்பில் கலந்து கொள்பவர்களைக் கண்டால் கரையாத கல்நெஞ்சமுள்ளவரும் தம் நிலைமாறி அம்பாளின் அருளால் ஆனந்தக்கூத்தாடுவார்கள்.

மேற்குறித்த குப்புச்சாமியார் தான் சிவசக்திபதம் அடையும் காலம் சமீபித்துவிட்டதென அம்பிகை அருளால் உணர்ந்தோ என்னவோ தன் கீழ் சிட்ஷயாராகிய ஐவரில் ஒருவரை தலைமைப்பூசகராகவும் மற்றவர்களை அடுத்தாற்போல் கோவிலுக்குள்ளே பூஜை வேலைகளை எக்காலமும்செய்யவேண்டுமென்றும், அவர்களும் பிழைவிடாமல் நடத்தவேண்டும் எனறும், அடிப் பிழை நேருங்கால் இவ்ஊர் சைவமாணிகளாகிய பொதுமக்கள் கூடி ஆவன செய்யவேண்டும் என்ற நிபந்தனையுடன் கோதலியும் அதற்குரிய பொருட்களையும் பொதுஜனங்களுக்கே தருமசாதனம் பண்ணியும், பொதுமக்களால் அதற்கோர் குழுச்சபையும் தெரிந்து அவை களோடு தானும்கூட இருந்து ஓர் பொங்கல் விழாவும் நடாத்திவிட்டு அடுத்த பொங்கலுக்கிடையில் சிவபதம் அடைந்தார்

நா. கி. தனஞ்செயன், மண்டைதீவு.

## வயிற்றில் சென்ற வைர மூக்குத்தி!

சென்னை, ஜூலை 7 சினிமா பார்த்துவிட்டு வீடு திரும்பிய பின் தன் மூக்கிலிருந்த வைர மூக்குத்தியைக் காதில் போட்டுப் பார்க்க ஆசைப்பட்டு வாயில் இடுக்கிக் கொண்டு காதணியைக் கழற்றும்போது, இருமல்வரவே வாயிலிருந்த மூக்குத்தி வயிற்றுக்குள் சென்றுவிட்ட சம்பவம் சென்னை கீழ்ப்பாக்கம் ஆஸ்பிரின் கார்டன் தெருவில் இடம்பெற்றது.

மனோகர் என்பவரின் 21 வயது மனைவி நீனுவே இச்சம்பவத்தின் கதாநாயகி ஆபத்தான நிலையில் நீனு ஜெனரல் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

## குற்றத்தை மறைக்க புதிய திட்டம்

பம்பலப்பிட்டி, புதன் வட பிரிவிலுள்ள பொலிஸ் நிலையங்களில் கடமையாற்றும் உத்தியோகஸ்தர்கள், அப்பிரிவுகளில் அதிகரித்துவரும் குற்றங்களை குறைக்க முயற்சி எடுக்காவிடில் அவர்களின் வருடாந்த சம்பள உயர்வு நிறுத்துவதற்கு ஒரு புதிய திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

இப்புதிய திட்டத்தை வட பிரிவு உதவி இன்ஸ்பெக்டர் ஜெனரல் திரு. அலிக் அபயகுணவர்த்தன தயாரித்துள்ளார்.

(5-ம் கலத் தொடர்ச்சி)

களை எப்படி நடத்துகிறோம்! மழை பெய்யாததற்கும் சமூகத்தில் புதுப்புது வியாதிகள் வருவதற்கும் இந்தப் பாவம் தான் காரணமா? நமது சுகாதாரத்துக்குப் பால்கொடுக்கும் பசுக்களையும், விவசாயத்துக்கான காளைகளையும் நாம் தக்கபடி பேணிப் பாதுகாக்கவேண்டாமா?

• • •

உரைமாலையெல்லா முடையவடி உரையா லுணரப்படாதவடி, வரைமாதை வாடாமை வைக்கும்மடி வானவர்கள் தாம் வணங்கி வாழ்த்துமடி, அரைமாத்திரையி லடங்குமடி அகலம் அளக்கிற் பாரில்லாவடி, கரைமாங்கலிக்கெடில நாடன்னடி கமழ் வீரட்டானக் கபாலியடி.

— அப்பர்சுவாமிகள்

## ஐயாறன்
### எழுதுவது

கொழும்பிலே சென்றவாரம் சரஸ்வதி மண்டபத்தில் ஒரு பிரபல விவாகம் நடந்ததாம். இந்த விவாகச்சடங்கின் கருத்துக்களை ஆங்கிலத்தில் விளக்கி, ஒரு துண்டுப்பிரசுரத்தை எல்லாருக்கும் கொடுத்தார்களும், அதைப் படித்து. விவாக முறையை நன்கு புரிந்துகொள்ள முடிந்ததென்றும் ஓர் அன்பர் கூறி, அப்பிரசுரத்தையும் கொடுத்தார்.

இந்து விவாகம் என்பது ஒரு புனித சமயச்சடங்கு என்றும், மாப்பிள்ளையை ஒரு தெய்வீகமானவராகக் கருதி அவரை வரவேற்பதென்றும் சங்கல்பம், விக்னேஸ்வர பூஜை, புண்ணியாவாசனம், ரக்ஷாபந்தனம், சிவ-பார்வதிபூஜை, நவக்கிரக பூஜை, ஹோமம், பாணிக்கிரகணம், மாலைதாரணம், அருந்ததி தரிசனம், ஆசீர்வாதம், ஆலாத்தி, முதலியவற்றை அப்பிரசுரத்தில் விளக்கியிருந்தார்கள்.

இந்துக்களில் பலருக்கே தங்கள் விவாகமுறையிலுள்ள பல சடங்குகள், மந்திரங்கள் இவற்றின் அர்த்தம் புரியாது. மந்திரங்களின் கருத்துக்களையும், விவாகச்சடங்குகளின் முக்கியத்தையும் விளக்கி ஒரு புத்தகமாக தமிழில் வெளியிட்டால், பலருக்கும விவாகத்தின் புனிதத்தன்மையும் முக்கியமும் விளங்குவதாக இருக்கும்

விவாகத்துக்கு முன், மணப்பெண் பூஜை அறையிலே தனித்து அமர்ந்து, தன் இரு பாதங்களையும் ஒரு கூடைக்குள் வைத்து, "தவம்" இருப்பதுண்டு. தனக்கு நல்ல கணவன் வரவேண்டுமென்று தெய்வத்தைக் குறித்து தவம் செய்ததின் பயனாக தெய்வானுக்கிரகத்தால் நாயகன் கிடைக்கிறதென்பது இதன் கருத்தாகும். இதற்கான மந்திரங்கள் பல சொல்லுவார்கள்.

சுந்தரமூர்த்திசுவாமிகள், பரவையாரைக் கண்டதும், "சிவனருளோ" என்று உணர்ந்தே அவரை விவாகம் செய்தாராம். பரவையாரும் அவ்விதமே சுந்தரரை நாயகனாகக் கொண்டார். வாழ்க்கையிலே புருஷனுக்கு மனைவியும், மனைவிக்குப் புருஷனும் வாய்ப்பது இறைவன் அளிக்கும் பெரிய அருள் என்பதே இந்து விவாகத்தின் அடிப்படை தத்துவமாகும்.

ஆனால் இன்றோ பலரும் அதன் புனிதத்தை மறந்துள்ளனர். அது ஏதோ மார்க்கெட் வியாபாரமென்ற நிலைக்கு தாழ்ந்துவிட்டது. மந்திரங்களின் அர்த்தத்தையும், இச்சடங்குகளின் கருத்துக்களையும் தமிழில் விளக்கி ஒரு புத்தகமாக விவாக காலத்தில் அளிப்பதாயின், அது பல விதங்களிலும் நன்மை பயக்கலாமல்லவா?

• • •

காலையிலே கண்ட ஒரு காட்சி மிக மனவேதனை அளித்தது. ஐந்தாறு பசமாடுகளையும், கன்றுகளையும், கழுத்தோடு கழுத்தாக சேர்த்துக் கட்டி, தெருவிலே அடித்துக் கொண்டே ஓட்டிச் சென்றனர். அது "கடைசி யாத்திரையாம்"! அந்த வாயில்லாப் பிராணிகளுக்கு இது தெரியும் போலும். மேலே கால் எடுத்து வைக்கவே மறுத்தன. அடிமேலடி விழுந்தது. அவற்றின் உள்ளம் என்ன பாடு பட்டதோ!

"எல்லா உயிர்களிலும் நானே இருக்கின்றேன்" என்று கீதையிலே கண்ணபெருமான் கூறியுள்ளார். உயிர்களிடத்தில் அன்புவேணும் என்கிறார் பாரதியார். "பசுக்களைத் தெய்வமாகப் பூஜிக்கவேண்டுமெனறும், அவற்றுக்குள் எல்லாத் தெய்வங்களும் இருப்பதாகவும் இந்துசாஸ்திரங்கள் கூறுகின்றன. ஆனால் இந்துக்கள் பெரும்பாலாக வசிக்கும் யாழ்ப்பாணத்தில் பசுக்

(4-ம் கலம் பார்க்க)

# வில்சன் அரசாங்கத்துக்கு 'நித்திய கண்டம் பூரண ஆயுசு!'

## மூன்று தடவை நடந்த வாக்கெடுப்பில் தோல்வி

லண்டன், ஜூலை 7

"நித்திய கண்டம் பூரண ஆயுசு" என்ற நிலையில்தான் பிரிட்டனின் தொழிற்கட்சி அரசாங்கம் உயிர் வாழ்ந்து வருகிறது. பிரிட்டிஷ் அரசாங்கத்தின் வரவு-செலவுத் திட்டத்தில் அம்சம்பெறும் நிதி மசோதாமீது நேற்று நடைபெற்ற வாக்கெடுப்பில் திரு வில்சன் தலைமையிலுள்ள தொழிற்கட்சி அரசாங்கம் தோற்கடிக்கப்பட்டது. இந்த மசோதாமீது நேற்று விவாதம் நடைபெற்றது. ஏற்றுமதி வரியில் சலுகை அளிக்கப்பட வேண்டுமென எதிர்க்கட்சியினர் இம்மசோதாவுக்கு திருத்தம் கொண்டு வந்தனர். திருத்தப் பிரேரணை



வாக்கெடுப்புக்கு விடப்பட்ட போது பதின்மூன்று வாக்குகளால் அது நிறைவேறியது. முதலில் நிதிமசோதா வாக்கெடுப்புக்கு விடப்பட்டபோது 14 வாக்குகளால் அது தோற்கடிக்கப்பட்டது. பின்னர் கைக் கூட்டத்தை ஒத்திவைக்க வேண்டுமென்று எதிர்க்கட்சியினர் கொண்டுவந்த பிரேரணை 15 வாக்குகளால் நிறைவேறியது. எனவே பிரிட்டிஷ் தொழிற்கட்சி அரசாங்கம் நேற்று மூன்று தடவைகள் நடைபெற்ற வாக்கெடுப்பிலும் தோல்வியடைந்தது.

வாக்கெடுப்பின் பின்னர் அரசாங்கம் ராஜினாமாச் செய்ய வேண்டுமென எதிர்க்கட்சியான கன்ஸர்வேடிவ் கட்சியினர் கூச்சலிட்டனர்.

ஆனால் தொழிற்கட்சி அரசாங்கம் ராஜினாமாச் செய்ய மாட்டாதென்றும் செய்ய வேண்டிய அவசியமில்லையென்றும் அரசாங்கப் பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்.

## யுதாண்ட் - வில்சன் நாளை லண்டனில் சந்திப்பர்

லண்டன், ஜூலை 7

ஜெனிவாவிலிருந்து நியூயோர்க் செல்லும் பொழுது லண்டனுக்கு வருமாறு ஐ. ந. தலைமைக் காரியதரிசி யுதாண்டுக்கு பிரிட்டிஷ் பிரதமர் திரு. ஹரோல்ட் வில்சன் விடுத்த அழைப்பை யுதாண்ட் ஏற்றுக்கொண்டுள்ளார்.



யுதாண்ட் வெள்ளிக்கிழமை லண்டன் வருவாரென எதிர்பார்க்கப்படுகிறது.

பிரிட்டிஷ் பிரதமர் தலைமைக்காரியதரிசி ஆகியோரின் சந்திப்புச் சம்பந்தமாக நிகழ்ச்சித் திட்டம் எதுவும் இல்லையெனினும் வியட்நாம் பிரச்னை பற்றி முக்கியமாக இருவரும் பேசுவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

வியட்நாம் பிரச்னைக்குச் சமாதானத் தீர்வுகாண்பதற்காக பிரிட்டிஷ் பிரதமர் வில்சன் தலைமையில் காமன்வெல்த் சமாதானத் தூது கோஷ்டியொன்று நியூயோர்க் சென்று ஐ. நா. தலைமைக் காரியதரிசியைச் சந்திப்பதாக இருந்தது. ஆனால் சமாதானத் தூதுக்குழுவை வரவேற்க சீனா, ரஷ்யா, வடவியட்நாம் ஆகியவை மறுத்துவிட்டதால் அக்குழு தனது நியூயோர்க் பிரயாணத்திட்டத்தை ரத்துச் செய்துவிட்டது.

வியட்நாம் சம்பந்தமாக சமாதானத் தூது முயற்சி எதைவிருக்கிறது.

யும் காமன்வெல்த் நாடுகள் இனியும் இப்போரைக்கு மேற்கொள்ளும் நோக்கம் இல்லையென்று பிரிட்டிஷ் மந்திரி பொட்டமனி நேற்று பிரிட்டிஷ் பார்லிமெண்டில் தெரிவித்தார்.

## யேமனில் புதிய மந்திரி சபை

சனா, ஜூலை 7

யேமன் அதிபர் திரு சலால் தாமே பிரதம மந்திரியாகப் பதவியேற்றதுடன் புதிய மந்திரி சபையொன்றையும் அமைத்துள்ளார். பதினைந்து பேர் கொண்ட மந்திரி சபையில் பதின்மூன்று பேர் இராணுவத்தினர்.

முன்னாள் பிரதமர் திரு. நோர்மன் சென்ற வாரம் தமது பதவியை ராஜினாமாச் செய்ததைத்தொடர்ந்து சலால் பிரதமராகவும் பதவியேற்றுள்ளார்.

முன்னாள் பிரதமரின் ஆதரவாளர்கள் பலர் கைது செய்யப்பட்டுள்ளதாக மற்றொரு செய்தி கூறுகிறது.

## காமராஜரின் பிறந்ததின விழா

திருச்சி, ஜூலை 7

காங்கிரஸ் அக்கிராசனர் திரு. காமராஜரின் 63-வது பிறந்ததின விழாவையொட்டி திருச்சியில் 'தேச அபிவிருத்தி' பற்றிய கருத்தரங்கம் ஒன்று நடைபெறவிருக்கிறது. இம்மாதம் 10-ம், 11-ம் திகதிகளில் நடைபெறவிருக்கும் இக்கருத்தரங்குக்கான வேலைகள் யாவும் பூர்த்தியாகிவிட்டதென திரு. ஆர். கிருஷ்ணசாமிச் செட்டியார் தெரிவித்துள்ளார்.

திரு. காமராஜரின் 63-வது பிறந்ததின விழாவை போற்றும்வகையில் திருச்சி நகரில் 63 ஞாபக வளைவுகள் கட்டப்படும்.

டாக்டர் மதுரம் மைதானத்தில் நடைபெறும் பொதுக் கூட்டத்தில் திரு. காமராஜருக்கு ரூ.13,600 கொண்ட பணமுடிப்புக் கொடுக்கப்பட

## விமான விபத்தில் 41 வீரர் பலி

லண்டன், ஜூலை 7

பிரிட்டிஷ் விமானப் படை விமானமொன்று நேற்று தெற்கு இங்கிலாந்தில் ஓக்ஸ்போர்ட்டுக்கு அருகே நொறுங்கி விழுந்ததில் அதிலிருந்த 41 படை வீரர்களும் மாண்டனர். பாரசூட் பயிற்சியில் இந்த விமானம் ஈடுபட்டிருக்கையிலேயே அதற்கு விபத்து ஏற்பட்டது. விமானம் நொறுங்கி விழுந்து தீப்பற்றி எரிந்து சாமானது. விமானத்தில் சென்ற எவரும் உயிர்தப்பவில்லை.

## பூபேஷ்குப்தா ராஜினாமா

புதுடில்லி, ஜூலை 7

ஸ்ரீ எஸ். ஏ. டாங்கே தலைமையிலுள்ள இந்திய கம்யூனிஸ்ட (வலதுசாரி) கட்சியின் ஒன்பது பேரடங்கிய செயற் குழுவிலிருந்து ஸ்ரீ பூபேஷ் குப்தா ராஜினாமாச் செய்துவிட்டதாக அறியப்படுகிறது. செயற்குழுவின் மற்றொரு அங்கத்தவரான ஸ்ரீ பி. சி. ஜோஷியும் ஓரிரு தினங்களில் ராஜினாமாச் செய்யக் கூடுமெனக் கூறப்படுகிறது. கட்சிக் கொள்கை சம்பந்தமான கருத்துவேறுபாடே ராஜினாமாவுக்குக் காரணம் எனக் கூறப்படுகிறது.

## ஐரோப்பிய பொதுச் சந்தை

### பிரான்ஸின் நடத்தை

பிரஸல்ஸ், ஜூலை 7

ஐரோப்பிய பொதுச் சந்தையின் மூன்று முக்கிய குழுக்களிலிருந்து பிரான்ஸ் தனது பிரதிநிதிகளை வாபஸ் பெற்றுள்ளது. இதனால் ஐரோப்பிய பொதுச் சந்தையின் அலுவல்களை ஸ்தம்பிக்கச் செய்துள்ளது.

இத்தாலிய பிரதமர் காலை மேற்கு ஜெர்மன் செல்கையில் மேற்கு ஜெர்மன் அதிபர் டாக்டர் எர்ஹார்ட்டைச் சந்தித்து பொதுச் சந்தைப் பிரச்னை பற்றி பேசுவாரெனத் தெரிகிறது.

## சத்யஜித்ரேக்கு மீண்டும் பரிசு

பேர்லின், ஜூலை 7

பேர்லினில் நடைபெற்ற சர்வதேச திரைப்படவிழாவில் இந்தியாவைச் சேர்ந்த சத்யஜித்ரேக்கு சிறந்த டைரக்டருக்கான 'வெள்ளிக்கரடி' பரிசு வழங்கப்பட்டது. சத்யஜித்ரேயின் 'சாருலதா' படம் இங்கு திரையிடப்பட்டது. இப்படத்துக்கு ஜேர்மன் கத்தோலிக்க பரிசும் வழங்கப்பட்டது. பேர்லின் திரைப்பட விழாவில் 'தங்கக்கரடி' பரிசு பிரெஞ்சுப் படத்துக்குக் கிடைத்தது.

## சுகர்ணோ பயணம்

கராச்சி, ஜூலை 7

கெய்ரோவுக்கும் பாரிசுக்கும் விஜயம்செய்தபின் ஜாகர்த்தா திரும்பும் வழியில் இந்தோனேஷிய அதிபர் டாக்டர் சுகர்ணோ நேற்றிரவு கராச்சியில் சிறிதுநேரம் தங்கிச்சென்றார்.

## காமராஜரின் சவாலை ராஜாஜியும் ஏற்றார்

சென்னை, ஜூலை 7

"மொழிப் பிரச்னையின் அடிப்படையில் 1967-ல் காங்கிரஸை எதிர்க்கத் தயாரா" என்று காங்கிரஸ் அக்கிராசனர் திரு காமராஜர் எதிர்க்கட்சிகளுக்கு விட்ட சவாலை ராஜாஜியும் ஏற்றுக்கொண்டுள்ளார். ராயபுரத்தில் நடைபெற்ற ஒரு பொதுக்கூட்டத்தில் பேசிய போதுதான் ராஜாஜி இச்சவாலை ஏற்றுக்கொண்டார்.

பொருளாதாரத் துறையில் காங்கிரஸின் திட்டங்கள் தோல்வியடைந்து விட்டன வென்றும், அவற்றை மறைப்பதற்காகவே காங்கிரஸ் தலைவர்கள் மொழிப் பிரச்னையைப் பெரிதாக்குகினர் என்றும் ராஜாஜி பேசும்போது சொன்னார்.

பலத்த கரகோஷத்துக்கிடையில் இக்கூட்டத்தில் பேசிய ராஜாஜி காங்கிரஸின் திட்டங்கள் பற்றிக் கிண்டல் செய்தார்.

ஆங்கிலம் ஒன்றுதான் இந்தியாவை ஒன்றாகப் பிணைத்து வைக்கிறதென்ற தன்னுடைய கருத்தை ராஜாஜி வலியுறுத்தம் செய்தார்.

"ஆனால் எனக்கு தமிழ்பிடிக்காதென்றும், ஆங்கிலத்தில் தான் எனக்குமோகம் என்றும் காமராஜர் கூறுகிறார். இது சுத்தப்பொய்" என்றும் கூறினார்.

முஸ்லிம் லீக், சுதந்திரக்கட்சி திமுக ஆகிய மூன்று கட்சிகளின் பிரதிநிதிகளும் இக்கூட்டத்தில் பேசினர்கள்.

திமுக தலைவர் திரு சி என் அண்ணாத்துரை ஏற்கெனவே இச்சவாலை ஏற்றுக்கொண்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## இந்தியர் செய்யும் சேவை

தாருல் இஸ்லாம், ஜூலை 7

தான்சானியாவில் புதிய இந்திய ஹைகமிஷனராக நியமிக்கப்பட்டுள்ள திரு. என். டி. ...ல் தமது பதவிப் பத்திரங்களை தான்சானியா அதிபரிடம் சமர்ப்பித்து பதவியேற்றுக்கொண்டார். இவ்வைபவத்தில் அதிபர் நியாரேரே பேசுகையில் தான்சானியாவின் வளர்ச்சியில் இந்திய வம்சாவளிமக்கள் பெரும் பங்கு கொண்டிருப்பதாகச் சொன்னார்.

## இருவரும் மாண்டனர்

சிங்கப்பூர், ஜூலை 7

சிங்கப்பூர் கடலில் இரு இந்தோனேஷியர் ஒரு படகில் வந்து மலேசியக் கப்பல் ஒன்றின்மீது எறிகுண்டுகளை வீசியதாகவும் மலேசிய கடற்படை ரோந்துப் படையினர் சுட்டதில் ஒருவர் மாண்டாரென்றும் மற்றவர் கடலில் மூழ்கினாரென்றும் அறியப்படுகிறது.

## சீனா பற்றி டாக்டர் பண்டா

லண்டன், ஜூலை 7

மாலாவி விரைவில் குடியரசாகுமென்றும் அது தொடர்ந்து காமன்வெல்த்தில் அங்கம் வகிக்குமென்றும் மாலாவி பிரதமர் டாக்டர் ஹேஸ்டிங்ஸ் பண்டா நிருபர்கள் கூட்டமொன்றில் தெரிவித்தார். மாலாவியின் முதலாவதாண்டு சுதந்திரதினம் நேற்று கொண்டாடப்பட்டது.

ஆபிரிக்க மக்களின் மனதைத் திருப்புவதில் சீனா லட்சக்கணக்கான பணத்தைச் செலவிடுவதாகக் குறிப்பிட்ட டாக்டர் பண்டா இப்பணத்தை சீன மக்களின் உணவுக்குச் செலவிட்டால் பயனுள்ளதாக இருக்குமென்றார்.

## தமிழ்காங்கிரஸ் செயற்குழுகூட்டம்

குரும்பசிட்டி, புதன்

அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸின் அடுத்த செயற்குழுக்கூட்டம் நல்லூரில் வரும் சனிக்கிழமை கட்சித்தலைவர் திரு ஜி. ஜி. பொன்னம்பலம் தலைமையில் நடைபெறும்.

அன்றையதினம் தமிழ்காங்கிரஸ் எம். பிக்களுக்கும் கடந்த தேர்தலில் அபேட்சகர்களாகப் போட்டியிட்ட கட்சியின் அபேட்சகர்களுக்கும் நல்லூர் தொகுதி பொதுமக்கள் சார்பில் வரவேற்பு உபசாரம் அளிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக அறியப்படுகிறது.

## இசைவிழா தேர்வு

பருத்தித்துறை, புதன்

பருத்தித்துறை தொகுதி தமிழ் பாடசாலைகளின் இசைவிழாவிற்கான தேர்வுப் போட்டிகளின் இரண்டாம் பிரிவுப் போட்டிகள் பருத்தித்துறை மெதடிஸ்த மகளிர்கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது:

வட்டாரவித்தியாதரிசி திரு. வி. முத்துலிங்கம் தலைமையில் நடைபெற்ற உபவிழாவில் பின்வரும் பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டன.

நாடகம் - தும்பளை சைவ வித்தியாசாலை, அல்வாய் ஜே. க. பாடசாலை.

பாட்டு— புலோலி கிழக்கு அரசினர் பாடசாலை, தட்டாதெரு மெ. மி. பாடசாலை, பெ லிகண்டிசைவப்பாடசாலை.

கீழைத்தேச நடனம்— தட்டாதெரு மெ. மி. பாடசாலை, தும்பளை சைவப்பாடசாலை, அல்வாய் ஸ்ரீலங்கா வித்தியாசாலை.

கிராமியநடனம்— சென் தோமஸ் றோமன் கத்தோலிக்க பாடசாலை, புலோலி கிழக்கு அரசினர் பாடசாலை, வல்வை சிவகுருவித்தியாலயம்.

அபிநயம்— தட்டாதெரு மெ. மி. பாடசாலை. வல்வை சிவகுரு வித்தியாசாலை, தொண்டமானாறு அ. மி. பாடசாலை.

## 'நிரந்தர நியமனம் வழங்குக'

நீர்கொழும்பு, புதன்

"நீர்கொழும்பு கடற்றொழில் இலாகாவின் பயிற்சிநிலையத்தில் இலங்கை தொழில்நுட்ப ஒத்துழைப்புத் திட்டத்தின் கீழ் ஜப்பானியப் பொறியியலாளர்களால் இலங்கையில் முதன்முதலாக வடக்கு, கிழக்குப் பகுதிகளிலிருந்து 8 தமிழ் இளைஞர்களுக்கு மரைன் டீசல் இயந்திரங்களில் பொறியியல் பிரிவில் பயிற்சியளிக்கப்பட்டு வருகிறது. இவர்களுக்கு அண்மையில் பலகோடி ரூபா திட்டத்தில் ஆரம்பிக்கப்பட்ட பொறியியல் பிரிவில் எந்தத் தாத்திலாவது நிரந்தர நியமனம் வழங்க ஏற்பாடுசெய்ய வேண்டும்."

இவ்வாறு கைத்தொழில் மீன்பிடி மந்திரி திரு. பிலிப் குணவர்த்தனவுக்கு கடற்றொழில் பகுதி பயிற்சி நிலைய மரைன் இயந்திரப் பயிற்சியாளர் சமூகம் அனுப்பியுள்ள மகஜரொன்றில் கேட்டுள்ளது.

"ஜி. சி. ஈ.

# உயர்தரபாடத் திட்டத்தை மாற்றவேண்டாம்"

## மந்திரிக்கு மாணவர் சங்கம் மகஜர்

யாழ்ப்பாணம், புதன்

"1964-ம் ஆண்டு ஜி சி இ உயர்தர தமிழ் புவியியல் பாடத்தொகுதி அட்டவணையை முற்றுகமாற்றி ஒரு புதிய பாடத் திட்டம் தற்பொழுது புகுத்தப்பட்டது. இதன் காரணமாக 1964-ம் ஆண்டு சோதனைக்கு முதல்முறை சென்ற மாணவர்கள் தற்பொழுக வேறு பாடத் திட்டமொன்றை படிக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது' என்று யாழ்ப்பாண மாணவர் சங்கத்தினர் கல்விமந்திரிக்கு அனுப்பிய மகஜரில் தெரிவித்துள்ளார்.

மேலும் அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:— இப்புதிய முறையினால் மாணவர்களாகிய நாம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளோம். இரண்டு வருடத்தில் இரண்டு புதிய பாடங்களை படிக்கவேண்டிய கஷ்டத்தை நீங்கள் நன்குணர்வீர்கள். ஆகையால் 1964-ம் ஆண்டுப் பாடத்திட்டத்தின் படியும் மாணவர்களை புவியியல் பாடத்தில் பரீட்சை எடுக்க விடும்படி கேட்டுக்கொள்ளுகின்றோம் இச்சலுகை ஏற்கனவே 1964-ம் ஆண்டிலும் இப்பாடத்திற்கு கொடுக்கப்பட்டதென்பது குறிப்பிடத்தக்கது.

இந்த மகஜரின் பிரதிகள் பிரதம மந்திரி, சர்வகலாசாலை உபவேந்தர், பாராளுமன்ற அங்கத்தவர்கள் முதலியோருக்கும் அனுப்பப்பட்டுள்ளன.

## புத்தக வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், வியா

திரு. நா. க. தங்கரத்தினத்தின் "கன்னிப் பெண்" சிறுகதைத் தொகுதி நூல் வெளியீட்டு விழா வருகிற ஞாயிற்றுக்கிழமை வட்டுக்கோட்டையில் நடைபெறவிருக்கிறது. வட்டுக்கோட்டை வீரபத்திர சிவன் கோவில் முன்றலில் புலவர் 'நல்லதம்பி அரங்கத்தால்' கொழும்புத்துறை ஆசிரிய கலாசாலை அதிபர் திரு. வி. எஸ் விஸ்வலிங்கம் தலைமையில் இவ் வெளியீட்டுவிழா நடைபெறும்.

—

## இலாகாவில் புதிய கிளை

யாழ்ப்பாணம், புதன்

கொழும்பிலுள்ள மோட்டார் போக்குவரத்து இலாகாவில் பல வருடங்களாக தனியாக இயங்கிவந்த நிர்வாகப்பகுதி கிளை இம்மாதம் 8-ம் திகதி தொடக்கம் இரண்டாகப் பிரிக்கப்பட்டுள்ளது. நிர்வாகப் பகுதிக்கு திரு என். கந்தப்பிள்ளை தலைமைகுமாஸ்தாவாகவும், கணக்குப்பகுதிக்கு திரு. சில்வா தலைமைக்குமாஸ்தாவாகவும் கடமையாற்றுகின்றார்கள்.

## அங்குரார்ப்பணக் கூட்டம்

கிளிநொச்சி, புதன்

கனகபுரம் அறநெறிக் கழக அங்குரார்ப்பணக்கூட்டம் திரு பா வி சேவியர் தலைமையில் நடைபெற்றது. தலைவர் கழகத்தின் கடமைகள்பற்றித் தமது தலைமையுரையில் கூறினார் மற்றும் திருவாளர்கள் ம. மேல்ரர், கு ப ஒலகாவகம், வா கிணைபிள்ளை, செ செபன்தியாம்பிள்ளை, பொ இராமலிங்கம் ஆகியோர் உட்பட பலர் பேசினர்கள். கழகத்தில் நடப்புவருட உத்தியோகஸ்தர்களும் தெரிவுசெய்யப்பட்டன.

—

## ஆனி உத்தர விழா

தனுக்காய் புதன்

வவனிக்குளம் சிவாலயத்தில் ஆனி உத்தர விழாவும், திருப்பணிச்சபையினரின் இரண்டாவது ஆண்டு நிறைவுவிழாவும் ஒட்டிசுட்டான் நீர்ப்பாசனப் பொறியியலாளர் திரு வி பாலசுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்றது. இன்று சூரிய உதயத்தில் சுவாமி தீர்த்த உற்சவமும் அடியார்களுக்கு அன்னதானமும் வழங்கப்பட்டது.

—

## ஐக்கிய விளையாட்டுக் கழக அங்குரார்ப்பணம்

யாழ்ப்பாணம். புதன்

"கழகங்கள் சிறந்த முறையில் நடாத்தப்பட வேண்டும். அப்பொழுதுதான் வாலிபர்கள் திறம்பட செயலாற்ற முடியும் இக்கருத்தை கழகங்களை உருவாக்கும் வாலிபர்கள் மனத்தில் கொள்ள வேண்டும்" என்று சங்கானை பட்டினசபை தலைவர் திரு. க. அம்பலவாணர் சங்கானையில் ஐக்கிய விளையாட்டுக் கழகத்தையும் சனசமூகநிலையத்தையும் இந்து சமய முறைப்படி குத்துவிளக்கேற்றி திறந்து வைத்துப் பேசுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

பட்டினசபை அங்கத்தவர் திரு. கே. செல்வராஜன் பேசுகையில் விளையாட்டுக்கழகங்கள் மூலம் நாட்டில் ஒற்றுமையையும் சிறந்த பண்பாட்டையும் வளர்க்கலாம் என்றார்.

—

## ஆசிரியரின் சேவைக்கு பாராட்டு

ரக்குவானை, புதன்

இறக்குவானை சரியோவான் வித்தியாலயத்தில் எட்டு வருடங்களாக ஆசிரியராகக் கடமையாற்றி இம்மாதம் முதலாம் திகதியிலிருந்து தமது சொந்த ஊரான நெடுந்தீவிலுள்ள சைவப்பிரகாச வித்தியாலயத்திற்கு மாற்றலாகிச் செல்லும் ஆசிரியர் திரு. சு. க. சிவநாயகமூர்த்திக்கு பெற்றோர் ஆசிரிய சங்கத்தினராலும்பழையமாணவர் சங்கத்தினாலும் பிரிவுபசாரமொன்று நடாத்தப்பட்டது. வைபவத்திற்குத் தலைமைவகித்த திரு க சபாரத்தினம் பேசுகையில், "இப்பாடசாலை ஆரம்பத்தில் 5 ம் வகுப்போடு இருக்கவேண்டுமென்ற அரசாங்கத்தினரின் முடிவை எதிர்த்துப் பெற்றோரைக் கூட்டிப் பெற்றோர் ஆசிரியர் சங்கச் செயலாளராயிருந்து வெற்றி கண்டவர் திரு சிவநாயகமூர்த்தி என்று கூறினர். மற்றும் பலரும் சிவநாயகமூர்த்தியின் சேவையைப்பாராட்டிப் பேசினர்.

—

## திருபரை வெளியேற்ற உத்தரவு

சிங்கப்பூர், ஜூலை 7

சிங்கப்பூரில் பல வருடங்களாக வாழ்ந்துவரும் பிரிட்டிஷ் அமெரிக்கப் பத்திரிகைகளின் நிருபர் அலெக்ஜோஸி என்பவர் நேற்று மலேசியாவை விட்டு வெளியேறவேண்டுமென்று மலேசிய அரசாங்கம் உத்தரவிட்டது. மலேசியாவுக்கு விரோதமான முறையில் அவர் நடந்துகொண்டதாக அவர்மீது குற்றஞ்சாட்டப்பட்டது.

## 'தமிழர் குறைகளை அரசாங்கம் நீக்கும்' றக்குவானை எம். பி. நம்பிக்கை

றக்குவானை, புதன்

"தமிழ் பேசும் மக்கள் ஒற்றுமையாகவும், ஒரே கட்சித் தலைமையின் கீழ் தமது உரிமைக்குரலை வெளியிடுபவர்களாகவும் இருந்தால் எந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தாலும் தமிழர்களால் எதையும் சாதிக்கக்கூடியதாக இருக்கும்" என்று திரு. க. சபாரத்தினம் றக்குவானை எம். பி தங்கு எசுகுலரத்தினவுக்கு இங்கு அளிக்கப்பட்ட வரவேற்புபசார நிகழ்ச்சிக்குத் தலைமைவகித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

தமிழ் எம் பிக்களின் உதவியாலேயே இன்று ஒரு புதிய அரசாங்கமே தோற்றுவிக்கப்பட்டுள்ளது. என்று மேலும் அவர் தமது தலைமையுரையில் குறிப்பிட்டார்.

திரு. குலரத்தின தமக்களிக்கப்பட்ட வரவேற்புக்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில், தமிழ் மக்களின் குறைகளைத் தமது அரசாங்கம் நீக்குமெனவும். குறைகளைப் போக்குவதற்குத்தான் உடனடியாக நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்தார்.

திருவாளர்கள் சு. சிவநாயகமூர்த்தி, எம். ஐ எம் ஜமீல், ஆர் செல்லையா, சந்தானம் உட்பட வேறுபலரும் பேசினர்.

—

## குருபூசை தினவிழா

குரும்பசிட்டி, புதன்

குரும்பசிட்டி சன்மார்க்க சனசமூக நிலைய ஆதரவில் மாணிக்கவாசகர் சுவாமிகள் குருபூசை தினவிழா சனிக்கிழமை இரவு கொண்டாடப்பட்டது. சன்மார்க்கசபா மண்டபத்தில் நடைபெற்ற இவ்விழாவில் திரு. கனகசெந்திநாதன் மாணிக்கவாசக சுவாமிகளது திருவாசகத்தில் உள்ள சிறப்புக்களை எடுத்து விளக்கி சொற்பொழிவு நிகழ்த்தினர்.

## காரியாதிகாரியின் சேவைக்குப் பாராட்டு

பருத்தித்துறை, புதன்

வடமராட்சிப் பகுதிக் காரியாதிகாரியாகக் கடந்த 5 ஆண்டிற்கு மேலாகக் கடமையாற்றி திருக்கோணமலைக்கு இடமாற்றலாகிச் செல்லும் காரியாதிகாரி திரு ஜே. டி. ஆர்னல்டுக்கு சந்தாதோட்டம் சனசமூகநிலையத்தினர் அளித்த பிரிவுபசாரத்தில் திரு. வ. சிவலிங்கம் பேசுகையில், சாதி மத பேதமின்றிச் சேவைசெய்தது மட்டுமல்லாமல் சிறுபான்மைத் தமிழ்மக்களது நலனில் அக்கறை கொண்டு திரு. ஆர்னல்ட் ஆற்றிய தொண்டுகள் அளப்பரியவை என்று கூறினர். நிலையத்தலைவர் திரு. வ. வேலுப்பிள்ளை தலைமைதாங்கினர்.

புலோலி தெற்கு கிராமசேவகர் திரு. செ. ஜெகநாதன் உட்படப் பலர் பாராட்டுரைகள் வழங்கினார்கள்.

## பரிசு பெற்றோர்

பருத்தித்துறை புதன்

வடமராட்சிப் பகுதிச் சுகாதாரவாரவிழாவை யொட்டி நடைபெற்ற சுதேசவிழாவில் பரிசு பெற்றோர் விபரம்:-

பாட்டு: புலோலி கிழக்கு அரசினர்பாடசாலை, கரவெட்டி சரஸ்வதி வித்தியாசாலை, கரணவாய் அ. மி. பாடசாலை.


நடனம்: அல்வாய் ஸ்ரீலங்கா வித்தியாசாலை, கரவெட்டி கிழக்கு அ. பாடசாலை, புலோலி கிழக்கு அ. பாடசாலை

நாடகம்: புலோலி இந்துக் கல்லூரி, அல்வாய் ஸ்ரீலங்கா வித்தியாசாலை, கம்பர் மலை அரசினர் பாடசாலை


ஒரு பிரபலமான டுப்பிளிகேட்டறின் பிரபலமான மொடல் சகாயமானவிலைக்கு உண்டு

REX-ROTARY

M2



எம்2 — விசேஷ அம்சங்கள்

காகிதங்கள் வைக்கும் பெட்டியில் 250 காகிதங்கள் வைக்கலாம். தபால் அட்டையிலிருந்து முழு அளவுக் காகிதம் வரையான எந்த அளவுள்ள காகிதத்திலும் பிரதிகள் எடுக்கலாம்.

உயரம், ஓரம் ஆகிய நிர்ணயங்களை இலகுவில் செய்யலாம். விரும்பிய விதத்தில் ஒழுங்கு செய்யக்கூடியது. ஸ்டென்சில் வெட்டுகள் செய்யக் கூடிய வகையில் சரி செய்யலாம்.

கௌண்டரில் நான்கு இலக்கங்கள் உண்டு. விரும்பினால், ஒற்றைக் கணக்கை மாற்றி சைபர் ஆக்கக்கூடிய வசதியும் செய்யப்பட்டுள்ளது. இது எடுக்கும் பிரதிகளின் எண்ணிக்கையைச் சரியாகக்கணக்கிடுகிறது. இயந்திரம் இயங்காதிருக்கும்போது கிராங்கின் சுழற்சிமுறை மாற்றுப் பொறி சுழற்சி எண்ணிக்கைகளை இது கணக்கிடுவதில்லை.

இத்தனை சிறப்பு வாய்ந்த அம்சங்களுடன் கூடிய எம்—2 இன் விலை குறைவானதே. பாவிக்கும்போதும் அதிக செலவு ஏற்படுவதில்லை. இதனால்தான் எம்—2 இன் விலைக்கு அது விரைவில் நல்ல சேவைபுரிகிறது.

எம்—2 மாற்றிய இன்னும் அதிகம் கூறலாம், உங்களுக்குக் கஷ்டமின்றி எவ்வளவுதூரம் அது சேவை செய்யும் என்பதை நீங்கள் அறிய வேண்டும், தொலைபேசி மூலம் அல்லது கடிதம் மூலம் எம்முடன் தொடர்புகொண்டால், எம்—2 வேலை செய்யும் விதத்தை உங்களுக்கு உங்கள் காரியாலயத்திலேயே காண்பிப்பதில் மகிழ்ச்சியடைவோம்.

விரைவில் இறக்குமதி செய்யப்படவிருக்கிறது.

ஆபீஸ் இக்கியுப்மெண்ட் லிமிட்டெட்
(OFFICE EQUIPMENT LTD.)

ஜல்லண்ட் கட்டிடம், கொழும்பு—3.

தொலைபேசி: 6168
தந்தி: ஆபீஸ் எயிட்ஸ்



REGAL - JAFFNA
NOW SHOWING
Richard Basehart
in
HITLER



மகத்தான 2வது வாரம்!

| | | |
|---|---|---|
| கிங்ஸ்லி (கொழும்பு) | பிளாசா (வெள்ளவத்தை) | நவா (கும்பனித்தெரு) |
| விஜயா (மட்டக்களப்பு) | வெலிங்டன் (யாழ்ப்பாணம்) | விஜிதா (ஹட்டன்) |

என். டி, ராமராவ், அஞ்சலிதேவி,
ஜெமினி கணேசன். எம். ஆர். ராதா,
மாஸ்டர் முரளி, பேபி உமா, நாகையா
மற்றும் பலர் நடித்த



லவகுசா

(முழுநீள கலர்ப்படம்)

உலகம் போற்றி புகழும் இராமாயண காவியத்தின் சிகரமாகும் ஒரு பொன்னேடு—லவகுசா—
படித்தவர்கள் பலகோடி! கேட்டவர்கள் பலகோடி!
இதோ சினிமாஸ்கிரீனில் பார்த்து மகிழுங்கள்!

# விளம்பரம்

## கேள்வி விளம்பரம்
### யாழ்ப்பாண மாநகர சபை

1. 1965-ம் வருடத்திற்குத் தேவையான அச்சடித்த பத்திரங்களும், புத்தகங்களும் விநியோகம் செய்வதற்குரிய கேள்வி விளம்பரங்கள் 20-7-65 நண்பகல் 12-00 மணி வரை யாழ்ப்பாண மாநகரசபை ஆணையாளரால் ஏற்றுக் கொள்ளப்படும்.
2. மாநகரசபை ஆணையாளர் நகரசபை மண்டபம் யாழ்ப்பாணத்திலிருந்து 19-7-65 பி. ப. 3-00 மணி வரை பெறக்கூடிய விண்ணப்பப் பத்திரங்களிலேயே கேள்வி விளம்பரம் விண்ணப்பித்தல்வேண்டும்.
3. கேள்வி விளம்பரம் இரு பிரதிகளில் விண்ணப்பிக்கவேண்டும், கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "அச்சடித்த பத்திரங்களும் புத்தகங்களும் விநியோகம் செய்வதற்குரிய கேள்வி விளம்பரம் எனக் குறிக்கப்பட்டிருத்தல்வேண்டும்.
4. காரியாலய நேரங்களில் மாதிரிப் பிரதியை மாநகர சபை ஸ்ரோரில் பார்வையிடலாம்.
5. மேலும் விபரங்கள் கீழ்க் கையொப்பமிட்டிருப்பவரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

ஹட்சன் செல்வராஜா,
உதவி மாநகரசபை ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகரசபைக்காரியாலயம்,
யாழ்ப்பாணம்.
5-7-65 453

## புலோலி கிராமசபைக் கந்தோர் கட்டிடம் கட்டுதல்

மேற்படி தவிலக்குரிய கேள்விப்பத்திரங்கள் 19-7-65 திங்கட்கிழமை பிற்பகல் 3 மணி வரையும் புலோலி கிராம சபைத் தலைவரால் வழங்கப்படும். கேள்விப் பத்திரங்கள் தலைவருக்கு 21-7-65 காலை 10 மணிக்குமுன் பதிவு செய்யப்பட்ட தபால்மூலம் அல்லது நேரில் சமர்ப்பிக்கலாம்.

கேள்விப்பத்திரங்கள் பிரதி ஒன்று வடபகுதி பிரதேச உதவி ஸ்தல ஸ்தாபன அதிபருக்கு அதே நேரத்தில் அனுப்பப்படவேண்டும்.

ரூபா 10,000-க்கு மேற்பட்ட பதிவுசெய்யப்பட்ட கொன்ருக்ரர்களுக்கு மட்டுமே கேள்விப் பத்திரங்கள் வழங்கப்படும்.

ரூபா 100- கட்டுப்பணம் கட்டியதன்பேரில் கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும். கேள்விப்பத்திரப்பணமாக ரூபா 15- கட்டவேண்டும். இப்பணம் திருப்பிக் கொடுபடமாட்டாது.

மற்றும் விபரங்களை வடபகுதி உதவி ஸ்தல ஸ்தாபனக் கந்தோரில் அல்லது எங்கள் கந்தோரில் கந்தோர் நேரங்களில் அறிந்து கொள்ளலாம்.

த. சிதம்பரப்பிள்ளை
பதில் தலைவர்,
புலோலிக் கிராம சபை
6-7-65 454

## வானொலி நிகழ்ச்சிகள்
### வியாழன் 8-7-65
### கொழும்பு

(செய்திகள் காலை 7-15, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவசமயசிந்தனை, 6-55 இஸ்லாமியசிந்தனை, 7-00 இசைப் பாடல்கள், 7-30 தேர்ந்த இசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்தநாள் வாழ்த்துக்கள், 5-15 மாணவர் மன்றம், 5-45 திரை இசை.

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 6-45 தமிழ்மொழிஇசைப்பாடல், 7-00 பேச்சு, 7-15 வயலின், 7-45 நாடகம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 கதாகாலட்சேபம், 9-30 நேயர்விருப்பம், 10-00 நிலையமுடிப்பதிவுகள்.

# ஹாட்லிக் கல்லூரி இல்ல விளையாட்டுப் போட்டி முடிவுகள்

பருத்தித்துறை, புதன்

"முற்காலத்தில் மாணவர்கள் அதிக தூரம் நடந்து பாடசாலைக்குச் சென்று திரும்பினர். பெற்றோருடன் தோட்ட வேலை முதலான சுயதொழில்களில் உதவிபுரிந்தனர். அதனால் திடகாத்திரமுடையவர்களாக இருந்தனர். இப்போது அந்த நிலைமை முற்றாக மாறிவிட்டது. ஆகவே விளையாட்டுக்களில் ஈடுபடுவதன் மூலம் தான் உடல் வளர்ச்சியையும், உரத்தையும் பெற்றுக்கொள்ள முடியும். அத்துடன் விளையாட்டுத்துறை கல்வியின் அம்சமாகவும் இடம்பெறுகிறது."

இவ்வாறு வடபகுதி உதவி வித்தியாதிபதி திரு. சி. தணிகாசலம் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி வருடாந்த இல்ல விளையாட்டுப்போட்டியில் கலந்துகொண்டு உரைநிகழ்த்துகையில் கூறினார்.

ஐந்து இல்லங்களுக்கிடையே நடைபெற்ற போட்டி விளையாட்டுக்களில் மொத்தம் 360 புள்ளிகளைப் பெற்ற செறப் இல்லம் முதலிடம் பெற்று இவ்வருடச் சாம்பியனாகியது.

கணபதிப்பிள்ளை இல்லம், போல்பிள்ளை இல்லம், ஏபிரஹாம் இல்லம், தாமோதரம் இல்லம் ஆகியவை முறையே 337, 338, 269, 246 புள்ளிகளைப் பெற்று 2ம், 3ம், 4ம், 5ம் இடங்களைப் பெற்றன.

நீளம் பாய்தல், உயரம் பாய்தல், 800 யார் ஓட்டம் முதலான வேறு விளையாட்டுக்களிலும் மொத்தம் 13 புதிய சாதனைகள் ஏற்படுத்தப்பட்டன.

## விளையாட்டுப் போட்டி முடிவுகள்

12 வயதுக்குட்பட்டோர்:

100 யார் ஓட்டம்- கே ஜெகதீசன், பி அன்பழகன், எஸ். மனோகரன்.

200 யார் ஓட்டம்- கே ஜெகதீசன், பி. அன்பழகன், ரி. ஞானவேல்.

நீளம் பாய்தல்- பி. அன்பழகன், ரி. ஞானவேல், சிறி மனுவேற்பிள்ளை.

உயரம் பாய்தல்- பி அன்பழகன், எஸ் மனோகரன், ஏ சிவஞானம்.

அஞ்சலோட்டம்- ஏபிரஹாம் இல்லம், போல்பிள்ளை இல்லம், தாமோதரம் இல்லம்.

14 வயதுக்குட்பட்டோர்

100 யார் ஓட்டம்- வி. சரத்சந்திரன, வி பிரதாபன், ஏ ஈஸ்வரன்.

200 யார்ஓட்டம்- வி. சரத்சந்திரன், வி பிரதாபன், ஏ ஈஸ்வரன்.

நீளம்பாய்தல்- வி சரச்சந்திரன், வி பிரதாபன், வி. செல்வநாதன்,

உயரம்பாய்தல்- வி. பிரதாபன், கே மயில்வாகனம், வி சரத்சந்திரன்.

அஞ்சல்ஓட்டம்- கணபதிப்பிள்ளை இல்லம், போல்பிள்ளை இல்லம், செறப் இல்லம்.

16 வயதுக்குட்பட்டோர்

100 யார்ஓட்டம்- ஏ ஜெகசோதி, வி மதிவாணன், டி கே போல்.

200 யார்ஓட்டம்- ஏ. ஜெகசோதி, வி. மதிவாணன், டி கே போல்.

400 யார்ஓட்டம்- ஏ ஜெகசோதி, வி மதிவாணன், வி யேசுராசா.

நீளம்பாய்தல்- கே பாலேந்திரன், டி கே போல், கே தவகுமார்.

மிதித்துப்பாய்தல்- எஸ் குணநாயகம், எஸ் வசந்தன், ச குகநேசன்.

உயரம்பாய்தல்- எஸ் ஆனந்தன், எஸ் வசந்தன், எஸ் ஆனந்தராசா.

பரிதிவட்டம் வீசல்- எஸ் குணநாயகம், எம் ஸ்ரீதரன், கே குகநேசன்.

ஈட்டியெறிதல்- எஸ் குணநாயகம் என் இரத்னகுமார், என் இளங்கோவன்.

குண்டெறிதல்- எம் ஸ்ரீதரன், ஏ ஜெயசோதி, டி கே போல்.

கேடில்ஸ் 100 யார்- பி சிவமோகன், எஸ். ஆனந்தன், எம் ஸ்ரீதரன்.

அஞ்சல்ஓட்டம்- செறப் இல்லம் போல்பிள்ளை இல்லம், ஏபிரகாம் இல்லம்.

19 வயதுக்குட்பட்டோர்

100 யார் ஓட்டம்- வி சந்திரநாயகம், ஐ ஜெயராசா, ஏ பரமாத்மா.

200 யார் ஓட்டம்- வி சந்திரநாயகம், ஐ ஜெயராசா, பி இராமநாதன்.

400 யார்ஓட்டம்- பி இராதாகிருஷ்ணன், எம் பரதலிங்கம், ரி ஜெயராசா.

800 யார்ஓட்டம்- பி இராதாகிருஷ்ணன், வி நித்தியானந்தன், வி திருக்குமார்.

மைல்ஓட்டம்- பி இராதாகிருஷ்ணன், வி திருக்குமார், வி நித்தியானந்தன்.

கேடில்ஸ் 110 யார்- ஏ செல்வராசா, எஸ கமலேஸ்வரன், எம். செல்வானந்தராசா.

உயரம்பாய்தல்- எஸ கமலேஸ்வரன், பி சத்தியநாதன், பி இராமநாதன்.

மிதித்துப் பாய்தல்- எஸ் கமலேஸ்வரன், பி சத்தியநாதன், கே சிவஞானசுந்தரம்

நீளம்பாய்தல்- ரி கணேசானந்தன், வி. இரத்தினராசா, எஸ. இன்பநாதன்.

பரிதிவட்டம்- பி சத்தியநாதன், சி. செல்லையாபிள்ளை, எம் பாலசுப்பிரமணியம்.

கோல் ஊன்றிப் பாய்தல்- எஸ் கமலேஸ்வரன், வி இரத்தினராசா, கே சிறிஸ்கந்தராசா,

ஈட்டிவீசல்- ஏ செல்வராசா. பி சத்தியநாதன், ஐ கணேசானந்தன்.

குண்டெறிதல்- பி யோகேஸ்வரன். ஆர் சண்முகநாதன், சி செல்லையாபிள்ளை.

அஞ்சல் 440 யார்- கணபதிப்பிள்ளை இல்லம், தாமோதர இல்லம், ஏபிரகாம் இல்லம்.

அஞ்சல் ஒருமைல்- தாமோதர இல்லம், போல்பிள்ளை இல்லம், கணபதிப்பிள்ளை இல்லம்.

சாம்பியன்கள்

பாலர்பிரிவு- ஏ அன்பழகன் க. இ.

கீழ்ப்பிரிவு- வி சரத்சந்திரன போ. இ

மத்தியபிரிவு- எஸ குணநாயகம் போ. இ.

மேற்பிரிவு பி இராதாகிருஷ்ணன் தா. இ.

## ஆசிரியசங்க கூட்டம்

யாழ்ப்பாணம், வியாழன்

அரசியல் தலையீடுகள் கல்வி நிலையைப் பெரிதும் பாதிக்கின்றது. ஆசிரியர்கள் படுகுழியில் வீழ்த்தப்பட்டால் எதிர்காலச் சமுதாயமே அழிந்துவிடும். இதற்கு ஆசிரிய சங்கங்கள் வேண்டிய நடவடிக்கை எடுப்பதற்கு ஆசிரியசங்கங்களை நாம் பலமுள்ளதாக்க வேண்டும்'' என்று வலிகிழக்குத் தமிழாசிரியசங்க 25-ம் வருட முதலாவது நிர்வாகசபைக் கூட்டத்துக்குத் தலைமைதாங்கிய சங்கத்தலைவர் திரு க இ குமாரசுவாமி தமது தலைமையுரையில் குறிப்பிட்டார்.

நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடந்த இக்கூட்டத்தில் புதுவருட வேலைத் திட்டங்களைப்பற்றி சங்கக்காரியதரிசி திரு அ பஞ்சாட்சரம் விளக்கிக் கூறினார். புதுவருடத்தில் விளையாட்டுப் போட்டி, சங்கீதவிழா, பேச்சுப்போட்டி போன்றவைகளை நடத்துவதெனக் கூட்டத்தில் முடிவுசெய்யப்பட்டது.

# வரி விளம்பரம்

### கல்வி

வர்த்தக பாடங்களில் 40 வருட அனுபவமுள்ள ஆசிரியராலும், கலை / விஞ்ஞானம் ஆகியவற்றிற்கு இலங்கை, இந்தியா, லண்டன் பட்டதாரிகளாலும் காலை 8 மணி தொடக்கம் மாலை 8 மணி வரையும் தனித்தனி வகுப்புகள் நடாத்தப்படுகின்றன. ஜி. சீ. ஈ. பரீட்சையில் 100% சித்தியடைகிறார்கள். மேற்படி பாடங்கள் கற்க விரும்புவோர் சென்ற காலப் பரீட்சை சித்திகளையும், வகுப்புகளின் ஒழுங்குகளையும், பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட காலத்தையும் நேரில் பார்த்து ஆராய்ந்து சேர வேண்டும். வர்த்தகக் கல்லூரி, (ஸ்தாபிதம் 1924) கிதிஸ்தல வீதி, பருத்தித்துறை.
628

ஆங்கிலம் / தமிழ், கணக்கியல், வர்த்தகம், வர்த்தக எண் கணிதம், ஒரு வருட வகுப்பு, ஆறுமாத வகுப்பு 3 மாத வகுப்பு - ஜி. சீ. ஈ (உயர்தர / சாதாரண) பரீட்சை, வர்த்தக ஆசிரிய கலாசாலைப் பிரவேசப் பரீட்சை லண்டன் சேம்பர் ஒவ் கொமேர்ஸ், லண்டன் இன்ஸ்ரிரியூட் ஒவ் கொமேர்ஸ், இன்ஸ்ரிரியூட் ஒவ் புக்கீப்பேர்ஸ் பிட்மன் இன்ஸ்ரிரியூட் இன்ஸ்ரெனோகிராபி எழுதுவினைஞர் பரீட்சை, வியாபாரப் பரீட்சை ஆகியவற்றிற்குரிய வகுப்புக்களுக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. வர்த்தகக் கல்லூரி, (ஸ்தாபிதம் 1924) கிதிஸ்தல வீதி, பருத்தித்துறை.
624

ஆங்கிலம் / தமிழ் பிட்மன் சுருக்கெழுத்து, தட்டெழுத்து 1 வருட- 6 மாத வகுப்புகள்- ஆங்கில பிட்மன் சுருக்கெழுத்து 6 மாதம் படித்தவர்கள தமிழ் பிட்மன் சுருக்கெழுத்து படிப்பதற்காக 3 மாத வகுப்புகள். தமிழ் பிட்மன் சுருக்கெழுத்து 6 மாதம் படித்தவர்கள் ஆங்கிலப் பிட்மன் சுருக்கெழுத்து படிப்பதற்கு 3 மாத வகுப்புகள். சேர விரும்புபவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். வர்த்தகக் கல்லூரி, (ஸ்தாபிதம் 1924) கிதிஸ்தலவீதி, பருத்தித்துறை.
625

ஜி. சி. இ. உயர்தர இரண்டாம் வருடத்தில் வைத்தியம், பொறியியல், கலை ஆகிய வகுப்புகளுக்கு விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும், யூனிட்டெட் இன்ஸ்ரிரியூற், நெல்லியடி, கரவெட்டி / 107, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
596

ஜி. சி. இ. சாதாரணப் பரீட்சைக்குரிய வகுப்புகளில், ஆங்கில மூலம் விஞ்ஞானம்-4, தமிழ் மூலம் விஞ்ஞானம்-6 கலை-9 ஆகிய இடங்களே காலியாக உள்ளது. உடனே தாமதம் செய்யாமல் பதிவு செய்து கொள்ளுங்கள். யுனிட்டெட் இன்ஸ்ரியூற். நெல்லியடி, கரவெட்டி / 107 பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
595

ஜி. சி. ஈ. உயர்தர நிலையில் சித்தியடைந்து சர்வகலாசாலையில் இடம்பெறாத மாணவர்களுக்காக ஜி. ஏ கியூ வகுப்புகள் தற்பொழுது தான் ஆரம்பிக்கப்பட்டுள்ளன, தாமதிக்காமல் உடன்சேருங்கள். பி. ஏ. வகுப்புகள் சில நாட்களுக்குள் ஆரம்பிக்க இருக்கின்றன. யுனிட்டெட் இன்ஸ்ரிரியூற்ற, நெல்லியடி கரவெட்டி / 107, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
600

### கல்வி

இந்த மாதத்தில் ஜி. சீ. ஈ, (சாதாரணம்) வர்த்தக வகுப்புகளில் சேரும் 15 மாணவர்களுக்கு இலவசக்கல்வி அளிக்கப்படும் யுனிட்டெட் இன்ஸ்ரியூற், நெல்லியடி, கரவெட்டி /107, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
601

### WANTED

"WANTED a Manager for Rural Credit and Banking section of the Paranthan M. P. C. S Ltd, Paranthan Age between 21 and 30 years. Minimum qualification G C E or S S C. (English medium) with four credits at one sitting. Preference will be given to those with qualifications in Banking Commerce and co-operative training. Security cash Rs 2000/-. and property Rs 5000/. Selected candidate will be required to undergo traing at the Polgolla Co-operative Training College and at a branch of the Peoples Bank and will be paid a stipead of Rs 100/- per month during this period He must be prepared to work at the society for at least five years after training Applications close on 13-7-65 "
621 Presedent.

தொய்வு, கசம், நீரழிவு, வெண்குஷ்டம் முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய கற்றலோக் இலும். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்றுயந்துள்ளனர். வைத்தியர் பரிபூரணானந்தர், கைலாசபிள்ளையார்கோவிலடி, யாழ்ப்பாணம்.

## இடமாற்றம்

வெள்ளவத்தை, புதன்

கொழும்பு நில அளவை இலாகாவில் பணியாற்றிய திரு என் இரத்தினசிங்கம் அநுராதபுரத்திலுள்ள நிலஅளவை அலுவலகத்திற்கு இம்மாதம் முதல் வாரத்திலிருந்து இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரியின் பழைய மாணவராகிய இவர், சோமாஸ்கந்தக் கல்லூரியின் பழையமாணவர் சங்கத்தின் கொழும்புக் கிளையின் உதவித்தனதிகாரியாவார்.

* * *

யாழ்ப்பாணம், வியாழன்

உரும்பிராய் சந்திரோதய வித்தியாசாலையில் 35 ஆண்டுகளுக்குமேல் உதவி ஆசிரியராகவும், சிரேஷ்ட ஆசிரியராகவும் கடமையாற்றிய பண்டிதர் நீ முருகேச நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரிப் பிரதம ஆசிரியராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.——

## புதிய கட்டிடம் அமைக்க முயற்சி

முல்லைத்தீவு, புதன்

கடந்த குறு வளியினால் மோசமான நிலையில் பாதிக்கப்பட்டு பாவனைக்குதவாத நிலையிலிருந்த முல்லைத்தீவு பலநோக்குக் கூட்டுறவுச் சமாஜத்தின் கட்டிடத்தை அழித்துத் தற்போது 53000 ரூபா பெறுமதியான கட்டிடத்தைக் கட்டி சமாஜத்தை நல்லமுறையில் நடாத்த அதன் தலைவர் திரு. மா. நடராசா தீவிர முயற்சி செய்துவருகிறார்.

## வருடாந்த விழா

குரும்பசிட்டி, புதன்

இலங்கை சிமெந்து கூட்டுஸ்தாபன தொழிற் சங்க ஊழியர்களது வருடாந்த விழாக் கொண்டாட்டங்கள் இம்முறை காங்கேசன் துறையில் இம்மாத இறுதிப் பகுதியில் நடைபெறவிருக்கின்றது.

# பல்லேகலை தோட்டத்தை அரசாங்கம் சுவீகரிக்கும்

கொழும்பு, புதன்

சர்ச்சைக்குள்ளாகியிருக்கும் பல்லேகல்ல தோட்டத்தைச் சுவீகரிக்கும்படி உதவி நிதிமந்திரி திரு என் விமலசேன அரசாங்கத்திடம் கேட்டுக்கொண்டதை அரசாங்க பாராளுமன்றக்குழு ஏற்றுக்கொண்டுள்ளது.

இவ்விஷயமாக பாராளுமன்ற குழுக்கூட்டத்தில் திரு விமலசேன பேசும்போது எல்லாக் கைத்தொழில்களும் அநேகமாக கொழும்பிலும் ஹாலிகமாக கொழும்பிலும், வடமாகாணத்திலும் இருப்பதாகவும், கைத்தொழிலை அபிவிருத்தி செய்வதற்கு மத்திய மாகாணங்களில் போதிய வசதியிருப்பதாகவும் கூறினர்.

இப்பகுதியில் கைத்தொழில் அபிவிருத்திக்கும், ஆறுகளும், மின்சார வசதிகளும் மனித சக்திகளும் போதியளவு இருப்பதாகவும், இதுமாத்திரமின்றி வேலையில்லாத் திண்டாட்டத்தில் கஷ்டப்படும் நூற்றுக்கணக்கான வாலிபர்கள் இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்திருந்தார்.

# ஸ்ரான்லி ஜயவீராவின் பயணம் ரத்து

# பொலிசார் தொடர்ந்து விசாரணை; பொருள்கள் சோதனை

கொழும்பு புதன்

கனடாவிலுள்ள இலங்கை ஹைகமிஷனர் காரியாலயத்தில் முக்கிய பதவி யேற்கச் செல்லவிருந்த திரு. ஸடான்லி ஜயவீராவின் பயணம் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. நேற்றுக் கைது செய்யப்பட்டு பின்னர் விடுதலை செய்யப்பட்ட திரு. ஜயவீராவை இன்று காலையும் பொலிசார் தொடர்ந்து விசாரணை செய்தனர்.

## பொருள்கள் இறக்கப்பட்டன

கனடாவுக்குப் புறப்படுவதற்குத் தயாராகவிருந்த திரு ஸ்டான்லி ஜயவீரா தமது பொருள்களை கனடாவுக்கு கப்பலில் அனுப்புவதற்கு ஒழுங்குசெய்திருந்தார். இப்பொருள்களில் சில கப்பலில் ஏற்றப்பட்டிருந்ததாகவும் அவைகள் இன்று காலையில் கப்பலிலிருந்து இறக்கப்பட்டு பொலிசார் அவற்றை சோதனை செய்ததாகவும் அறியப்படுகிறது.

திரு ஸ்ரான்லி ஜயவீரா பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சில் (பிரஜா உரிமை பிரிவு) உதவிக்காரியதரிசியாகக் கடமையாற்றியவர். இவரது வீட்டில் நேற்றிரவு பொலிசார் திடீர்சோதனை நடத்தி சில தஸ்தாவேஜுகளைக் கைப்பற்றினர் என்ற செய்தி நேற்றைய 'ஈழநாடு' பத்திரிகையில் வெளிவந்தது தெரிந்ததே.

## ஆர். ஜி. யின்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கூறினர்.

### துரைரத்தினம் குறுக்கீடு

திரு ஆர் ஜீ சேனநாயகாவின் "ஆவேச"மான பேச்சைத்தொடர்ந்து பருத்தித்துறை எம். பி. திரு க துரைரத்தினம் ஆத்திரமாகப் பேசினர்.

"யாழ்ப்பாணத்தினர்கள் கள்ளக்கடத்தலில் ஈடுபடுகிறார்கள் என்பது அபாண்டமான குற்றச்சாட்டாகும். இதனை நான் வன்மையாக ஆட்சேபிக்கிறேன்" என்று திரு துரைரத்தினம் பேசினர்.

### "ஏன் இந்தக் கோபம்?"

அப்பொழுது திரு. ஆர். ஜீ. சேனநாயக்கா குறுக்கிட்டு: "எனது பேச்சைக் கேட்டு எல்லோரும் அமைதியாக இருக்க தங்களுக்கு மட்டும் கோபம் வருவதேன்" என்று கேட்டார்.

### "வல்வெட்டித்துறை ஒரு கடத்தல் தளம்"

"யாழ்ப்பாணத்திலுள்ள வல்வெட்டித்துறை ஒரு கள்ளக்கடத்தல் தளமாக விளங்குகிறது. இதற்கு அங்குள்ள "பெரியவர்கள்" ஊக்கமளிக்கின்றனர்" என்றும் திரு. ஆர். ஜீ குறிப்பிட்டார்.

### "குற்றவாளி நாங்களல்ல"

"கள்ளக்கடத்தலில் ஈடுபடுபவர்கள் நாங்களல்ல உங்களின் தென்னந்தோட்டங்களில் உள்ளவர்கள்தான் இப்படியான "தொழிலில்" ஈடுபடுகின்றனர். உங்களின் குற்றத்தை எங்களின் மீது சுமத்த வேண்டாம்" என்று திரு. துரைரத்தினம் திரு. ஆர். ஜியைக் கேட்டுக் கொண்டார்.

'கண்டியில் சிங்களவர்களின் செல்வாக்கு குறைந்து கொண்டே வருகிறது" என்றும் திரு. ஆர். ஜீ. குறிப்பிட்டார்.

சில கட்டங்களில் திரு ஆர். ஜீ. சேனநாயக்காவுக்கும், திரு க. துரைரத்தினத்துக்குமிடையே வாய்ச் சண்டை ஏற்பட்டது. பலசந்தர்ப்பங்களில்

(5ம் கலம் பார்க்க)

# வியட்காங் வலுக்கோட்டையில் அமெரிக்கர் கடும் தாக்குதல்

சைகோன், ஜூலை 7

வியட்நாமில் வியட்காங்கியரின் வலுக்கோட்டை ஒன்றின் மீது இன்று அமெரிக்கத் துருப்புகள் இவ்வாரத்தில் இரண்டாவது தடவையாகவும் தாக்குதல் நடத்தின. இத் தாக்குதல் வியட்நாம் யுத்தத்தில் இப்பகுதியில் இது மூன்றாவது தாக்குதலாகும். இப்பகுதியில்தான் 86 துருப்புகளைக்கொண்ட ஒரு அவுஸ்திரேலியா அணியை வியட்காங் கொரில்லாக்கள் சுற்றிவளைத்து தாக்கியிருக்கின்றன.

சில தினங்களுக்குமுன்பினேக்கு என்ற இடத்தில் தென்வியட்நாம், அமெரிக்க அணியொன்று முற்றாக அழிக்கப்பட்டுவிட்டதாக கருத வேண்டியுள்ளதென வாஷிங்டனில் அமெரிக்க அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதே சமயம் தென்வியட்நாமில் டாகுன் அமெரிக்க தளத்தில் மேலும் எண்ணூறு அமெரிக்க மாலுமித் துருப்புக்கள் தரையிறங்கத் தொடங்கியுள்ளன. ஏற்கனவே டாகுனில் 9500 அமெரிக்க மாலுமித் துருப்புகள் இருக்கின்றனர்.

கொழும்பு

## விவேகானந்த சபை அறிக்கை

பம்பலப்பிட்டி புதன்

சர்வ மத காங்கிரசின் தோற்றம்கண்டு ஆட்சிக்குழு சந்தோஷப்படுவதுடன் இந் நிகழ்ச்சியில் திருவாளர்கள் ஆர். சபாநாயகம், எஸ். சோமசுந்தரம், கே. ஆழ்வாப்பிள்ளை ஆகியோர் சபையின் சார்பாக பிரதிநிதித்துவம் வகித்தனர். இவ்வியக்கத்தின் நடவடிக்கைகள் மதங்களின் நோக்கங்களுக்காக ஒற்றுமை, சமாதானம், சகோதரத்துவம், அன்னியோன்யமான கூட்டுறவு போன்றவற்றை எப்பொழுதும் நிலைநாட்டப் பாடுபடும். இதனால் விவேகானந்தசபையின் அடிப்படை நோக்கங்களில் அமுல்நடத்தப்படுகிறதெனப் பெருமைப்படுகிறோம்" என்று கொழும்பு விவேகானந்தசபையின் அறுபத்திரண்டாவது வருடாந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வருடந்தோறும் நடத்தப்படும் பூஜைகள், சமய விழாக்கள், இசைவிழாக்கள், நாட்டிய இசைவகுப்புகள், சமயப் பரீட்சை முதலியன பற்றியும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சபையின் கட்டுப்பாட்டு உத்தியோகத்தர்களாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள். தலைவர்: திரு எம் வயிரவப்பிள்ளை. உபதலைவர்கள்: திருவாளர்கள் கே ஆழ்வாப்பிள்ளை, எஸ், சிவசுப்பிரமணியம், ஆர் சபாநாயகம், நீதிராசா, கே லக்ஷ்மணன், கே பி காலியப்பாபிள்ளை, எஸ் சிவசிதம்பரம், வி சங்கரலிங்கம், பண்டிதர் கா. பொ. இரத்தினம், பொதுக்காரியதரிசி: திரு. எஸ் இராசதுரை; பொருளாளர்: திரு. வி ஆர் வடிவேற்கரசன். 88 பேர் கொண்ட பொதுசபை ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது.

## "இன்னல்களை களைந்தனர்"

பம்பலப்பிட்டி, புதன்

'உலகின்கண் இடுக்கண் வந்த காலத்தில் சமயவாதிகளும், தீர்க்கதரிசிகளும் அவதரித்து இன்னல்களைக்களைந்துள்ளார்கள். அதேபோன்று சைவசமயமும் நெருக்கடி நிலைதடுமாறிய காலத்தில் நாயன்மார்கள் மெய்யடியார்களாக அவதரித்து சைவசமயத்தில் புதுமலர்ச்சியைத் தோற்றி எம்மையெல்லாம் உய்வித்துச் சென்றுள்ளார்கள் அவர்களுக்குள் நாம் இன்று விழா எடுக்கும் மாணிக்கவாசக சுவாமிகளும் ஒருவராவர்!

இவ்வாறு இலங்கை வானொலி தமிழ் நிகழ்ச்சி அதிகாரி திரு கா, செ. நடராசா கொம்பனித் தெரு சைவமுன்னேற்றச் சங்கத்தினரால் நடத்தப்பட்ட மாணிக்கவாசக சுவாமிகள் குருபூசையில் கலந்து பேசுகையில் குறிப்பிட்டார்

கொம்பனித் தெரு சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் மண்டபத்தில் நடைபெற்ற மேற்படி வைபவத்தில் திரு நடராசா மேலும் பேசுகையில் கூறியதாவது.-

உலகிலுள்ள பல்வேறு சமயங்களையும் வளர்ப்பதற்கும் போதிப்பதற்கும் போதகர்களும் குருமார்களும் உண்டு. ஆனால் சைவசமயம் ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக இவ்வித துணையின்றி செழித்தோங்கி வளர்ந்துவருகின்றது. எமது இறைவனுக்கு உருவமில்லை. அருவமானவர். ஆதியோ, அந்தமோ இல்லாதவர். ஆன்மாவானது எந்த உருவத்தில் அவரை உள்ளத்தில் வைத்து வழிபடுகின்றதோ அந்த உருவில் அந்த ஆன்மாவுக்கு அவர் காட்சியளிப்பார். நான் என்ற ஆணவம் நீங்கி நம்மைப் பக்குவப்படுத்துவதன் மூலமே இறைவனைக் காணலாம். ——

## மந்திரி வாக்குறுதி

ஊர்காவற்றுறை, புதன்

ஊர்காவற்றுறை பட்டின சபைத் தலைவர் திரு. வி. சிவசம்பு ஸ்தலஸ்தாபன அமைச்சரைக் கொழும்பிலும், யாழ்ப்பாணத்திலும் சந்தித்துப் பேசியபோது இரண்டாவது தண்ணீர்த்திட்டத்திற்கு ஒழுங்கு செய்யப்படும் என்றும் மின்சாரதிட்டம்பற்றி வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் அமைச்சர் திரு திருச்செல்வம் தெரிவித்துள்ளார்.

தீவுப்பகுதிகளின் தலைப்பட்டினமாகக் கருதப்படும் ஊர்காவற்றுறை சரித்திரப் பிரசித்தி பெற்ற துறைமுகமும், பட்டினமாகவும் இருக்கிறது. சகல அரசாங்க காரியாலயங்களையும் கொண்டுள்ளது. நெடுந்தீவு, நயினாதீவு. அனலைதீவு, எழுவைதீவு செல்லும் பிரயாணிகள் இப்பட்டினத்திற்கு வந்தேசெல்வார்கள். எனவே! இப்பட்டினத்தில் குடிதண்ணீர், மின்சார வசதி இருக்கவேண்டியது அவசியமாகும் என அமைச்சருக்கு தெரிவிக்கப்பட்டது. மோசமான நிலையில் இருக்கும் வீதிகளைத் திருத்தவும் நன்கொடை வழங்கவேண்டுமெனவும் ஊர்காவற்றுறை பட்டின சபை அமைச்சரைக் கேட்டுக்கொண்டது.

(5-ம் கலத் தொடர்ச்சி)

"மோதல்களும் மூண்டன சில கட்டங்களில் ஆர். ஜீ யுடனான வாய்ச் சண்டையில் சியமன எம்.பி திரு அண்ணாமலையும் சேர்ந்து ஆர். ஜீ. யை வன்மையாகக் கண்டித்தார்.

### சிவசிதம்பரம் கண்டனம்

உடுப்பிட்டி எம். பி. திரு எம் சிவசிதம்பரம், திரு. ஆர். ஜியின் கூற்றை வன்மையாகக் கண்டித்தார்.

"எதிர்க்கட்சியினரின் பிரேரணை சில பிரச்சனைகளைத் தீர்க்க உதவியாக இருந்தாலும் இதில் வகுப்புவாதத்தைக் கிளப்புவது நல்லதல்ல, யாழ்ப்பாணத்தவர்கள் கள்ளக்கடத்தலில் ஈடுபடுவது வரவேற்கத்தக்க சந்தோஷப் படவேண்டிய விஷயமல்ல, ஒரு சிலர் இதற்கு ஆதரவளிப்பதை முழுமாகன் மீதும் சுமத்தமுடியாது" என்றும் திரு. எம். சிவசிதம்பரம் கூறினர்.

இறுதியில் எதிர் கட்சியினரின் பிரேரணை முடியாத ஒரு கதையாகி விட்டது. இப்பிரேரணை எந்தவித ஒரு முடிவுக்கும் வராமலே கைவிடப் பட்டுவிட்டது.

## செனட்சபையில்

### கூ. மொ. வி. பற்றி கண்டனம்

பம்பலப்பிட்டி, புதன்

செனற் சபை நேற்றுக்கூடிய பொழுது கூ மொ வி ஸ்தாபனம் பற்றி கண்டும் பலத்த கண்டனங்கள் அங்கத்தவர்களால் தெரிவிக்கப்பட்டன.

வர்த்தக மந்திரி டாக்டர் எம் வி பி பீரிஸ் பேசுகையில் குறிப்பிட்டதாவது:-

நான் கூ மொ வி ஸ்தாபனத்தைப்பற்றிய லஞ்ச ஊழல்களையும் நிர்வாகச் சீர்கேடு பற்றியும் பொதுமக்களுக்கு எடுத்துக்காட்ட முற்பட்டுள்ளேன். இந்த ஸ்தாபனம் சீர்கெட்டு நிலையிலிருந்தது கேவலமான உண்மையே. தேசிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்னரே வருடாந்த கணக்குகள் யாவும் தற்பொழுது பரிசோதிக்கப் பட்டுவருகின்றன.

## கலைஞருக்கு அரசாங்க உதவி

பம்பலப்பிட்டி, புதன்

கலாச்சார இலாகாவினால் தேர்ந்தெடுக்கப்படும் திறமை வாய்ந்த கலைஞர்களுக்கும் சிற்பிகளுக்கும் அரசாங்க உதவி அளிக்க கலாச்சார இலாகா தீர்மானித்துள்ளதாக அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இத்துறைகளுக்கு ஊக்கமளிக்கும் நோக்கமாகவே இத்திட்டம் அமுல் நடத்தப்படவிருப்பதாகத் தெரிகிறது.

## தற்கொலையை தடுத்தார்

அதன்கம, புதன்

வீட்டிலிருந்து வெளியேறி மாத்தறைக் கடலில் தற்கொலை செய்ய முயற்சித்த 19 வயது யுவதி பிரேமவதியை சார்ஜண்ட் பத்மநாதன் அவ்வாறு செய்யவிடாது தடுத்துக் காப்பாற்றினர்.

## செப்பு உற்பத்தி

புதுடில்லி, ஜூலை 7

இந்தியாவில் இரும்பு அல்லாத உலோகம் கண்டுபிடிப்பதற்கான ஆராய்ச்சியில் அமெரிக்கா உதவியளிக்கவிருக்கின்றது.

ஒரிஸாவில் செம்பு உற்பத்திக்கு சோவியத்யூனியன் உதவியளிக்கும்.

## திறப்பு கொடுக்கப்பட்டது

கண்டெடுக்கப்பட்டு 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்ட திறப்பு அதற்குரியவரிடம் இன்று கொடுக்கப்பட்டது.

பண்டாரவளை, புதன்

பண்டாரவளையைச் சேர்ந்த 45 வயதுடைய கே. கே. என், ராஜேசுவரியும், அவரது 4 வயதுடைய மகன் சில்வாவும் மின்னலால் தாக்குண்டு மரணமானார்கள்.

## மரண அறிவித்தல்

சித்தன் கேணி காலஞ்சென்ற மாசிமுத்து திருவம்பலம் பெண் சிதம்பரம் சிவபதம் அடைந்தார். இவர் பளை தென்னந்தோட்ட அதிபர் சிமயம், கம்பனி புசத்தனை தோட்ட அதிபர் ராமஜெயம் ஆகியோரின் தாயாரும், கோளாம்பூர் புகையிரத இலாகாவிலிருந்து இளைப்பாறிய நமசிவாயம் கனகசபையின் சகோதரியுமாவார். ஈமச்சடங்கு 8-7-'65 இன்று காலை 9-00 மணிக்கு வழுக்கியாறு மயானத்தில் நடைபெறும். "சூம் சூழ்" சித்தன்கேணி.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1965-ம் ஆண்டு ஜூலை மாதம் 8-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.